விலை: 30.00
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


MoneyGram
Ria
WESTERN UNION WU
Moving Money for better
உறவுகளிடமிருந்து
Western Union,
MoneyGram, Ria மூலம்
அனுப்பிய பணத்தை
ஒரு சில நிமிடங்களில்
நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு
துரித தபால்கள்,
பொதிகள் சேவை
உடனுக்குடன்
அனுப்ப...
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 17 வெள்ளிக்கிழமை (30.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 132

## யாழ்.பல்கலை மாணவனுக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவன் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 19

## கொடிகாமம் நகரில் எழுமாற்றுப் பரிசோதனை
### சந்தை வியாபாரிகள் இருவர், வர்த்தகர் இருவருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் நகரத்தில் எழுமாறாக நடத்தப்பட்ட பிசிஆர் சோதனையில் 4 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப் 19

## மாமன் தாக்கியதில் மருமகன் உயிரிழப்பு
### தருமபுரத்தில் சம்பவம்

(தருமபுரம்)

தருமபுரத்தில் மாமன் தாக்கியதில் மருமகன் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய 19

## வேகமாகப் பரவும் கொரோனா
# வார இறுதி நாட்களில் நாடு முடக்கப்படும்?
## கொழும்பு உயர்மட்டம் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் நாளுக்கு நாள் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்துவரும் நிலையில் வார இறுதி நாட்களான சனி, ஞாயிறு தினங்கள் நாடு முடக்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

மே 1ஆம் திகதி தொழிலாளர் தினம் கொண்டாடப்படவுள்ள நிலையில் பொதுமக்களின் ஒன்றுகூடலை தவிர்க்கவே மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)

## கொரோனா 6 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 6 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார 19

## P2P வழக்கு விசாரணை
### நீதிமன்றம் இடைக்காலத் தடை

(கொழும்பு)

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில், கலந்து கொண்டோருக்கு எதிரான 19

## யாழில் பொலிஸ் உத்தியோகத்தருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்றைய பரி 19

## நாட்டில் நேற்று ஒரே நாளில் மட்டும் +1,531 பேருக்கு கொரோனாத் தொற்று

(கொழும்பு)

நாட்டில் கோவிட் -19 நோய்த் தொற்றால் நேற்று ஒரே நாளில் ஆயிரத்து 531 பேர் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டில் ஒரே நாளில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் அதிகூடிய எண்ணிக்கை இதுவாகும்.

நாட்டில் 2020 ஜனவரி மாதம் முதல் நேற்று வரை ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 484 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## யாழ்.மாவட்டத்தில் 14 பேர் உட்பட வடக்கில் 21 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 14 பேர் உட்பட வடக்கில் நேற்று 21 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாக யாழ். போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழில் நேற்று 760 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டன.

இதன்படி யாழ்.மாவட்டத்தில் 14 பேருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 3 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் 3 பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

(ம-3,18,33)

## மறுஅறிவித்தல் வரை வழிபாட்டுத் தலங்களில் ஒன்றுகூடத் தடை

(கொழும்பு)

இலங்கையில் உள்ள சகல வழிபாட்டு தலங்களிலும் மறு அறிவித்தல் 19

## அதிகரிக்கும் கொரோனா
# ரயில் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தம்

(கொழும்பு)

அதிகரித்துவரும் கொரோனாத் தொற்று பரவல் காரணமாக தொலைதூர மற்றும் நகர் புறங்களுக்கான தொடருந்து சேவைகள் 19

## பருத்தித்துறையில் கஞ்சா கடத்திய மூவர் கைது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வியாபாரிமூலை 19

## கொரோனா பிடியிலிருந்து இந்தியா மீண்டெழும்
### பிரதமர் மோடிக்கு கோட்டா கடிதம்

(கொழும்பு)

இந்தியாவில் கொரோனா தொற்று தீவிரமாக பரவிவருவது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கரிசனை செலுத்தியுள்ளதாகவும் இது குறித்து இந்திய பிரதமருக்கு ஜனாதிபதி கடிதம் எழுதி 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



வடமாகாண் கல்வி அமைச்சின் செயலாளர்
திரு. **இ. இளங்கோவன்** அவர்களின் அன்புத் தாயாரும்
எமது பாடசாலை ஆசிரியை திருமதி **கிருபாகரி இளங்கோவன்**
அவர்களின் அன்பு மாமியாருமாகிய

## அமரர் மகேஸ்வரி இலட்சுமணன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(6752)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா / பெரியபுலம் மகா வித்தியாலயம்,**
**காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியை

## திருமதி நாகேஸ்வரிதேவி மதனசுரேந்திரன்

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த
துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**
**ஆசிரிய நலன்புரிக் கழகம்** (6741)

# கண்ணீர் அஞ்சலி



வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்
திரு. **இ. இளங்கோவன்** அவர்களின்
பாசமிகு தாயார்

## திருமதி மகேஸ்வரி இலட்சுமணன்

(C-2071)

அவர்கள் நேற்று முன்தினம் (28.04.2021)
புதன்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மாகாணக் கல்விப் பணிப்பாளரும்,**
**உத்தியோகத்தர்களும்**
**மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்.**

# கண்ணீர் அஞ்சலி



வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர்
விவகார அமைச்சின் செயலாளர்
திரு. **இ. இளங்கோவன்** அவர்களின்
அன்புத் தாயார்

## திருமதி மகேஸ்வரி இலட்சுமணன்

(C-2074)

அவர்கள் நேற்று முன்தினம் (28.04.2021)
புதன்கிழமை இறைபதம் அடைந்த செய்தி
அறிந்து துயர் அடைவதுடன்
அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளரும் உத்தியோகத்தர்களும்**
**வட மாகாண விளையாட்டுத் திணைக்களம்**

# மூன்றாவதும் முதலாவதும் ஆண்டு நினைவுகள்



அமரர்

## சிவபாக்கியம் சிவராசா

தோற்றம் 04.05.1937
மறைவு 29.01.2018

மூன்று, ஒன்று என ஆண்டுகள்
கடந்து சென்ற போதும் - எங்கள்
அன்னை பிதா நினைவுகள் - எமது
நெஞ்சை விட்டு கடந்து செல்வதில்லை
தந்தையின் புன்னகையும் எம்
தாயவள் பார்வையும் எங்கள்
விழித்திரையில் இன்றும் காட்சியாக
விரிந்து செல்கின்றன...

**உங்கள் ஆத்மா சாந்தியடைய**
**இறைவனைப்**
**பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**



அமரர்

## கந்தையா சிவராசா

தோற்றம் 10.04.1931
மறைவு 10.05.2020

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு.

(6751)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களுடனான தொடர்பினை துண்டியுங்கள்

## வடக்கு மீனவர்களிடம் அவசர வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**இந்திய மீனவர்களுடன் தொடர்புகளைப் பேணுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு வடக்கு மீனவர்களிடம் மீன்பிடி திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் கொரோனா தொற்றின் வேகம் அதிகரித்துள்ளதை அடுத்தே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மீன்பிடி திணைக்களத்தின் நடவடிக்கை பணிப்பாளர் கல்யாணி ஹேவா பத்திரன தெரிவித்துள்ளதாவது,

இந்திய மீனவர்களுடன் கொடுக்கல்-வாங்கல்கள் மற்றும் பொருள்கள் பரிமாறுதல் போன்ற எவ்வித நடவடிக்கையையும் முன்னெடுக்க வேண்டாம்.

இந்தியாவிலிருந்து மஞ்சள் மற்றும் சட்டவிரோத பொருள்களைக் கொண்டு வருவதையும் தவிர்க்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி-4)

## நாட்டை முடக்கினால் பொருளாதாரம் வீழ்ந்துவிடும்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றின் தீவிரத்தால் நாட்டை முழுமையாக முடக்குவதற்கு எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்தார். ஆனால், கொரோனாத் தொற்றாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்படும் பிரதேசங்கள் முடக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

"கொரோனா வைரஸ் தொற்று நிலைமையில் நாட்டை முழுமையாக முடக்கினால் பொருளாதார ரீதியில் நாடு வீழ்ந்துவிடும். இதனால் நாட்டை முடக்காது கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கவே அரசு முயற்சிக்கும்.

இதேவேளை, வைத்தியசாலைகளில் ஏற்படக் கூடிய இடப்பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு இராணுவத்தால் 1500 கட்டில்களைக் கொண்ட சிகிச்சை நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன" என அவர் தெரிவித்தார். (நி-4)

## இராணுவ உதவி நெறிமுறை தொடர்பான ஆவணங்களில் சீனா கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்து இலங்கைக்கு சீனா ஆதரவளித்தமைக்கு பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமால் குணரத்ன சீன பாதுகாப்பு அமைச்சரிடம் நன்றி தெரிவித்துடன், உயர்மட்ட சீன பாதுகாப்பு தூதுக்குழுவின் உத்தியோகபூர்வ விஜயத்தின் ஓர் அங்கமாக இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ உதவி நெறிமுறை தொடர்பான ஆவணங்களிலும் கைச்சாத்திடப்பட்டன.

இலங்கைக்கு இரு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய்ஃபெங்கினுடனான இருதரப்பு கலந்துரையாடல் கொழும்பு ஷங்க்ரி-லா ஹோட் டலில் நேற்று முன்தினம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## அவசரகாலநிலை ஏற்பட்டால் எதிர்கொள்ளத் தயார்-அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

அவசரகால நிலை ஏற்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கான தயார்படுத்தல்களை மேற்கொண்டுள்ளோம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நேற்று இடம்பெற்ற வடக்கு மாகாண நிலைமைகள் தொடர்பாக ஆராயும் கூட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாத நிலைமை காணப்படுகிறது.

குறிப்பாக கடல் கடந்து மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடியாளர்கள் சிலவேளைகளில் ஏனைய தமிழ் நாட்டு மீனவர்களுடன் தொடர்பு கொள்ளக் கூடிய வாய்ப்புகள் அதிகமாக காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இவை தவிர்க்கப்படல் வேண்டும்.

வைத்தியசாலைகளில் ஒட்சிசன் நிலைமை திருப்திகரமாக இருந்தாலும் அதற்குரிய முன்னேற்பாடு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்தில் ஈடுபடுகின்ற பேருந்துகள் ஆசனத்திற்கு அமைய பயணிகள் ஏற்ற வேண்டும். இருந்தபோதும் தூர இடங்களுக்கான சேவைகளை அந்த விதத்தில் செயற்படுத்தும் போது சேவைகளை அதிகரிப்பது தொடர்பான ஒரு வேண்டுகோளை இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியாரிடம் கோரப்பட்டுள்ளது.

எந்த வேளையிலும் அவசர கால நிலைக்கு வடக்கு மாகாணம் தயாராக இருக்க வேண்டும்.

சகல வழிபாட்டுத் தலங்களிலும் சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்றவாறு ஆலயத்தில் மதகுரு மற்றும் உபயகாரருடன் மக்களின் பங்குபற்றுதல் இன்றி ஆலய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

திருமண மண்டபங்களை பொறுத்தவரை சுகாதார வழிகாட்டல்களுக்கமைய இயங்கலாம். ஆனால் அதற்கு முன்பாக திருமணத்தில் கலந்து கொள்வோரின் பெயர்ப்பட்டியல் உட்பட பல விபரங்களை பொதுச் சுகாதார பரிசோதகரிடம் சமர்ப்பித்து உரிய அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மண்டப உரிமையாளர்கள் அதற்குரிய சுகாதார வழிகாட்டலை பின்பற்ற வேண்டும் எனவும் இதனை கண்காணிப்பதற்கு பொலிஸ் தரப்பினரும் இணைந்து செயற்பட வேண்டும்.

யாழ்.மாவட்ட மக்கள் இக்கட்டான நிலைமையை கடந்து செல்வதற்கு அனைத்துத் தரப்பினரும் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்.

பொதுமக்கள் தேவைக்கு ஏற்றவாறு உங்களுக்குரிய அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்யலாம். எனினும் தற்போதைய நிலையில் அரசானது பாரிய முடக்க நிலை அறிவிக்காது எனக் கூறப்படுகின்றது. இருந்தபோதிலும் மக்களுடைய அன்றாட வாழ்க்கை பாதிக்காத வண்ணம் ஒரு அசௌகரியத்தை எதிர்கொள்ளாத வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எனவே எந்தவொரு நடவடிக்கைக்கும் கடந்தகால அனுபவங்கள் இருக்கின்றன. அவற்றை பின்பற்றி செயற்படுதல் நல்லது. இது குறித்து பொதுமக்கள் பீதியடையத் தேவையில்லை எனவும் தெரிவித்தார். (நி-4-33)

## வங்கிகளுக்கு விசேட விடுமுறை

(கொழும்பு)

வங்கிகளுக்கு இன்று அரை நாள் விசேட விடுமுறை தினமாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

மே முதலாம் திகதி சர்வ தேச உழைப்பாளர் தினம் சனிக்கிழமையன்று இருக்கும் காரணத்தினால் இவ்வாறு அனைத்து வங்கிகளுக்கும் இன்று விசேட அரைநாள் விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## சீன அமைச்சர் சென்ற கையோடு பிரதமரை சந்தித்த கோபால் பாக்லே



(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை நேற்று முற்பகல் அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடினார். சீனப் பாதுகாப்பு அமைச்சர் இலங்கை விஜயத்தை நிறைவு செய்த பின்னர் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை அவசரமாக சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல்.கிரிக்கெட் போட்டிகளில் அதிக அரைச்சதங்கள் அடித்த முதல் வீரர் வோர்னர்



14வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் டில்லியில் நேற்று முன்தினம் இரவு நடந்த 23வது லீக் ஆட்டத்தில் முன்னாள் சம்பியன்கள் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் ஐதராபாத் சன்ரைசர்ஸ் அணிகள் விளையாடின.

இந்தப் போட்டியில் சன்ரைசர்ஸ் அணியின் கட்டன் டேவிட் வோர்னர் பல சாதனைகளை புரிந்துள்ளார்.

தனது 148-வது ஐ.பி.எல். போட்டியில் விளையாடி ஐ.பி.எல்லில் 50 அரைச்சதங்கள் அடித்த முதல் வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

இருபது-20 கிரிக்கெட்டில் 10 ஆயிரம் ரன்களையும் அவர் கடந்துள்ளார்.


வோர்னருக்கு அடுத்து அதிக எண்ணிக்கையில் அரைச்சதங்கள் அடித்த வீரர்கள் வரிசையில் டெல்லி அணியின் ஷிகர் தவான் (43) 2வது இடத்திலும், பெங்களூர் அணி கப்டன் விராட் கோலி (40) 3வது இடத்திலும் உள்ளனர்.

சென்னை அணிக்கு எதிரான நேற்று முன்தினம் போட்டியில் அவர் அடித்த 2 சிக்சர்கள் ஐ.பி.எல்லில் 200 சிக்சர்களை அடித்த வீரர்களின் வரிசையில் 8வது இடத்தில் வோர்னர் உள்ளார்.

இதுதவிர வெளிநாட்டு வீரர்களில் கிறிஸ் கெய்ல் (354 சிக்சர்கள்), ஏபி டிவில்லியர்ஸ் (245 சிக்சர்கள்) மற்றும் கீரன் பொல்லார்டு (202) ஆகியோருக்கு அடுத்து 4ஆவது இடத்தில் உள்ளார். (4-6)




## ரிச்சர்ட்சனுக்கு பதில் குகெலெஜின்



இந்தியாவில் கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில், அவுஸ்திரேலியா விமான போக்குவரத்திற்கு தடைவிதித்துள்ளது.

மேலும் எல்லைகளை மூடும் நிலையில் உள்ளது.

இந்நிலையில் பெங்களூர் வீரர் கேன் ரிச்சர்ட்சன் சொந்த காரணத்திற்காக ஐபிஎல் தொடரில் இருந்து விலகுவதாக தெரிவித்தார்.

இந்த நிலையில் நியூசிலாந்தின் வேகப்பந்து வீச்சு ஓல்ரவுண்டரான ஸ்கொட் குகெலெஜின்-ஐ ரிச்சர்ட்சனுக்கு மாற்று வீரராக அணியில் சேர்த்துள்ளனர். (4-6)

# ஒரேஞ் நிறத் தொப்பியை கைப்பற்றினார் டு பிளிஸ்சிஸ்



ஐபிஎல் 2021 கிரிக்கெட் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தொடக்க பட்ஸ்மனான டு பிளிஸ்சிஸ் இதுவரை 6 போட்டிகளில் இரண்டு முறை ஆட்டமிழக்காமல் 270 ரன்கள் குவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிக்கெதிராக 56 ரன்கள் விளாசினார்.

இதன்மூலம் கடைசியாக விளையாடிய மூன்று போட்டிகளிலும் அரைச்சதம் விளாசி அசத்தினார்.

இத்தொடரில் தவான் 6 போட்டிகளில் 265 ரன்கள் விளாசிஒரேஞ்தொப்பியை தன் வசம் வைத்திருந்தார். (4-6)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணம்-2021; 2-வது சுற்றுக்கு விக்டோறி தகுதி

கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்திற்காக கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் முதலாவது சுற்றின் 7 ஆவது போட்டி கடந்த வார இறுதியில் நடைபெற்றபோது விக்டோறி அணி ஹாட்லியைற்ஸ் அணியை ஒரு இலக்கினால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லியைற்ஸ் அணி 27 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது. றஜீவன்- 21, கிரிதரன்-30, ராகவன்- 12, ஆனந்தசஜன்-11, புருசோத்மன்-28 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

விக்டோறி சார்பில் சரத்குமார்-04, பிரசாத்-03, ஜங்கரன், திரேஸன், ராகவன் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்டோறி அணி 29.5 ஓவர்களில் 09 இலக்குகளை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

பிரசாந்-68, பிரணவன்-22, சரத்குமார்-22 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். ஹாட்லியைற்ஸ் அணி சார்பில் ரஜீவன்-04, பிரசாத்-02, பிரதீப், தினோஜன் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.

இப்போட்டியில் சிறந்த வீரராக விக்டோறி அணியைச் சார்ந்த பிரசாந் தெரிவு செய்யப்பட்டார். (4-6)

# பெண்கள் வலைப்பந்தாட்ட தொடர் சிவகுமரன் அணி இறுதிக்கு தகுதி



கரவெட்டி இளைஞர் கழகங்களுக்கு இடையிலான பெண்களிற்கான வலைப்பந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி சிவகுமரன் அணி இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது.

இதன் அரையிறுதியாட்டம் கடந்த திங்கட்கிழமை கருணாகரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

அரையிறுதியாட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் இளைஞர் கழக அணியை எதிர்த்து கருணாகரன் இளைஞர் கழக அணி மோதியது.

இதில் உடுப்பிட்டி சிவகுமரன் இளைஞர் கழக அணி 7:5 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது. (4-90)

## பெண்களுக்கான கபடி போட்டி; கருணாகரன் அணி சம்பியன்



கரவெட்டி இளைஞர் கழகங்களுக்கு இடையிலான பெண்களிற்கான கபடி போட்டியின் இறுதியாட்டம் கடந்த திங்கட்கிழமை கருணாகரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் கருணாகரன் இளைஞர் கழக அணியை எதிர்த்து சிவகுமரன் அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய கருணாகரன் இளைஞர் கழக அணி 12:3 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (4-6-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்
உயர்திரு. இ. இளங்கோவன் அவர்களின்
அன்புத் தாயார்



**திருமதி. மகேஸ்வரி இலட்சுமணன்**

அவர்கள் இறைபதம் அடைந்த
செய்தி கேட்டு நாமும்
துயரடைவதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச்சமூகம்,
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பளை.

C-2069)

## நெஞ்சில் நீங்காத நினைவுகளுடன்

## ஏழு ஆண்டுகள்



திருமதி.
**கண்ணகைப்பிள்ளை மயில்வாகனம்**

திதி : சித்திரை மாத சங்கடஹர சதுர்த்தி (30.04.2021)

அன்புத் தெய்வமே ஆண்டுகள் ஏழு
போனது அம்மா எங்களுடன் வாழ்ந்த
அழகிய நினைவுகளும் தங்கள்
அன்பும் எம்மை வழிநடத்திச்
செல்லும் தங்களை நேரில் காண
இயலாது இருப்பினும் நீங்கள்
எப்போதும் எம்முடனே
வாழ்கின்றீர்கள். (6743)

தோற்றம் 1924.10.13
மறைவு 2014.04.19

மகன் - குடும்பத்தினர்
இல.140, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

## உப தபாலகங்கள் திறந்திருக்கும் நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

கொரோனா பரவல் காரணமாக உப தபால் நிலையங்களை திறந்து வைக்கும் நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை குறித்த தபால் நிலையங்கள் திறந்து வைக்கப்படும் என அஞ்சல் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கு முன் உப தபால் நிலையங்கள் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை திறக்கப்பட்டிருந்தன.

அத்துடன் சனிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை உப தபால் நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கும் என அஞ்சல்மா அதிபர் தெரிவித்தார். (நி-4)

## எட்டு நாட்களில் மட்டும் 7481 பேருக்கு தொற்று

(கொழும்பு)

இலங்கையில் கடந்த 8 நாட்களில் மட்டும் 7 ஆயிரத்து 481 புதிய கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று 2 ஆவது நாளாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் இந்தத் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. (நி-4)

## பள்ளி தொழுகைக்கு 25 பேருக்கே அனுமதி

(கொழும்பு)

பள்ளிவாசல்களுக்கு அவசர கொரோனா கட்டுப்பாடுகள் விதிக்க வக்புசபை பணிப்புரை விடுத்துள்ளதாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா பரவல் நிலைமையைக் கருத்திற்கொண்டு, சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கேற்ப இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய பள்ளிவாசல்களில் ஒரேநேரத்தில் தொழுகைக்காக அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 25 பேராக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஐவேளை தொழுகைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (நி-4)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
நடராசா பாலச்சந்திரன்
அவர்களின் தந்தை

**முருகேசு நடராசா**

அவர்கள் காலமான செய்தி
அறிந்து ஆழ்ந்த அனுதாபத்தை
குடும்பத்தினருக்கு தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி,
ஆசிரிய நலன்புரிக்கழகம். (6740)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆரம்பப்பிரிவு பகுதித்
தலைவரும் ஆசிரியருமாகிய
திரு. பா. சத்தியநாதன் அவர்களின்
அன்பு மாமியார்

**அமரர்: திருமதி முத்தம்மா மகாலிங்கம்**

அவர்கள் 26.04.2021 அன்று காலமாகிவிட்டார்.
அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்
களை தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 1939.07.22
இறப்பு 2021.04.26

யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்,
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள். (6747)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
இராசரத்தினம் வின்சற்
அவர்களின் சகோதரி

**ஜெனிதா யோகநாதன்**

அவர்கள் காலமான செய்தி
அறிந்து ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி,
ஆசிரிய நலன்புரிக்கழகம். (6739)

## இரண்டாம் ஆண்டு நினைவில்

## நினைவுடன்



அமரர்.
**திரு. செல்லத்துரை தர்மரத்தினம்**
**(பெரியண்ணை)**

[உரிமையாளர் STR Multy Center,
STR Travels - அராலி]

திதி: சங்கடஹர சதுர்த்தி [30.04.2021]

என்றும் எம்மை அன்புடன் அரவணைத்து
நாம் வாழ்வில் முன்னேறிட
பல அறிவுரைகள் தந்த அன்புத் தந்தையை
நாம் இழந்து இரண்டாண்டு ஓடிவிட்டதோ
தேம்பித் தவிக்கின்றோம்
உம் நினைவில்...

தோற்றம்: 1945.03.28
மறைவு: 2019.04.22

அராலி கிழக்கு,
வட்டுக்கோட்டை.

என்றும் உங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர். (6748)

## கண்ணீர் அஞ்சலி



வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர்
விவகார அமைச்சின் செயலாளர்
திரு. இ. இளங்கோவன் அவர்களின்
அன்புத் தாயார்

திருமதி
**மகேஸ்வரி இலட்சுமணன்**

அவர்கள் நேற்றுமுன்தினம் (28.04.2021)
புதன்கிழமை இறைபதம் அடைந்த செய்தி
அறிந்து துயர் அடைவதுடன்
அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலம்புரி நிர்வாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனசமூக நிலையத்தை வளப்படுத்த வேண்டிய பொறுப்பு நகர சபைக்கே உள்ளது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் ஆளுகைக்குட்பட்ட சனசமூக நிலையங்களை வளப்படுத்த வேண்டிய பொறுப்பு சாவகச்சேரி நகர சபைக்கு உள்ளது என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக் அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நகர சபையின் ஒப்பந்த வேலைத்திட்டங்களை சன சமூக நிலையங்கள் ஊடாக முன்னெடுப்பதனை நாம் வரவேற்கிறோம்.

இருப்பினும் ஒரு சில சனசமூக நிலையங்களுக்கு ஒப்பந்த வேலைத்திட்டங்களை வழங்கி ஏனைய சனசமூக நிலையங்களுக்கு ஒப்பந்த வேலைத்திட்டங்களை வழங்காது நிராகரிக்கும் செயற்பாடு முறையற்றது.

சகல சனசமூக நிலையங்களையும் வளப்படுத்த வேண்டிய கடமை நகர சபைக்கு உண்டு. அத்துடன் கடந்த காலங்களில் 2 மில்லியன் ரூபாய் வரையான நகர சபையின் ஒப்பந்த வேலைத்திட்டங்கள் சன சமூக நிலையங்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டது.

ஆனால் தற்போது இரண்டு மில்லியன் என்ற தொகை பாதியாக குறைக்கப்பட்டுள்ளது.

அதற்கான சரியான காரணத்தை ஆணையாளர் அலுவலகத்திடம் கேட்டு நகரசபை அதனை உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

ஒப்பந்த வேலைத்திட்டங்களை வழங்கும் பட்சத்தில் மாத்திரமே சனசமூக நிலையங்களை வளப்படுத்தி இயங்கு நிலையில் வைத்திருக்க முடியும் என மேலும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (5-4-30)




# நாய்களுக்கான விசர் நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்து யாழ்.நகர் II பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி (ARV) தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசி ஊசியை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

அந்த வகையில் எதிர்வரும் 3 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு அத்தியடி பிள்ளையார் கோவிலடி அத்தியடி, முற்பகல் 11 மணிக்கு ஸ்ரான்லி வீதி பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்பாக, பிற்பகல் 2.30 மணிக்கு நாவலர்மண்டபம்நாவலர்வீதி.

04 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு இராசாவின் தோட்டவீதி ஸ்ரான்லி வீதி சந்தி, முற்பகல் 11 மணிக்கு கோவில் வீதி றக்கா வீதி சந்தி, பிற்பகல் 2.30 மணிக்கு மருதடி லேன் வைரவர் கோவிலடி.

05 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு நல்லூர் தெற்கு சனசமூக கற்பக பிள்ளையார் கோவிலடி, முற்பகல் 11 மணிக்கு றக்கா வீதி இளங்சிங்கம் சனசமூக நிலையம், பிற்பல் 2.30 மணிக்கு கோவில் வீதி ஆஸ்பத்திரி வீதி சந்தி.

06 ஆம் திகதிமுற்பகல் 9 மணிக்கு மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையம், முற்பகல் 11 மணிக்கு அருள் மாதா கோவிலடி ராசாவின் தோட்டம், பிற்பகல் 2.30 மணிக்கு மாட்டீன் வீதி சப்பல் வீதி சந்தி.

07 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு 2ம் குறுக்குதெரு வேம்படி வீதி யாழ்ப்பாணம், முற்பகல் 11 மணிக்கு O.L.R. தேவாலயம் 4ம் குறுக்குதெரு, பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். புகையிரத நிலைய வீதி வைரவர் கோவிலடி.

10 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு கோயில் வீதி ரயில் தண்டவாள சந்தி, முற்பகல் 11 மணிக்கு ஆஸ்பத்திரி வீதி கோயில்வீதி சந்தி, பிற்பகல் 2.30 மணிக்கு சோமசுந்தரம் வீதி.

11 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு பழைய பூங்கா பகுதி, முற்பகல் 11 மணிக்கு சுவாஸ் லேன், பிற்பகல் 2.30 மணிக்கு கொழும்புத்துறை வீதி விதானையார் வீதி சந்தி.

12 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு சந்தனமாதா கோவில் பகுதி, முற்பகல் 11 மணிக்கு கச்சேரிகிழக்கு ஒழுங்கை, பிற்பகல் 2.30 மணிக்கு குருசோ வீதி கிறின்பில்ட் வாசிகசாலை.

13 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு மத்தியூஸ் வீதி சென் சாள்ஸ் ஆரம்ப பாடசாலை, முற்பகல் 11 மணிக்கு காட்டு கந்தோர் ஒழுங்கை, பிற்பகல் 2.30 மணிக்கு கச்சேரி நல்லூர் வீதி நாவலர் வீதிச்சந்தி ஆகிய இடங்களில் தடுப்பூசி ஏற்றல் இடம் பெறும். (5-4)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

அரியாலை ஞானதீபம் அமைதிகள் இளையோர் திறன் விருத்தி மையத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நாளை மறுதினம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 12.30 மணிவரை பண்ணை வளவு, அரியாலையில் அமைந்துள்ள திறன் விருத்தி மைய் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-8)

• • • • • • • • • • • • • •

(குப்பிழான்)

விதையனைத்தும் விருட்சமே இளைஞரணியின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நாளை மறுதினம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத்தில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

குறித்த இரத்ததான முகாமில்அனைத்துக்குருதிக்கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-18)

# தனங்கிளப்பில் சிறுபோக அறுவடைவிழா



(யாழ்ப்பாணம்)

வேல்ட் விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் தனங்கிளப்பு கிராமத்தில் நெல் அறுவடையின் பின்னராக சிறு தானிய பயிர்ச்செய்கை இடம் பெற்று அறுவடை விழா நேற்று காலை இடம்பெற்றது.


இதில் சாவகச்சேரி பிரதேச செயலர் , வேல்ட் விஷன் நிறுவனத்தின் முகாமையாளர், கைதடி கமநல சேவை நிலையத்தின் உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

நெற்பயிர்ச்செய்கையின் பின்னராக அனைத்து விவசாயிகளையும் சிறுதானிய பயிர்ச்செய்கையில் ஈடுபட ஊக்குவிக்கும் நோக்குடன் இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதன் பலனை விவசாயிகள் பெறும் அன்றைய நாளை ஒரு விழாவாக தனங்கிளப்பு கமக்கார அமைப்பு முன்னெடுத்தது. (5-4-30-33)

# சங்காபிஷேகம்


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண இந்துசமயப் பேரவை ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத தில்லை ஸ்ரீமத் நடராஜப்பெருமான் ஆலய சங்காபிஷேகம் எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. (5-6)




சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் தொழிலாளர் தின சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

(படம்:- ரவிசாந்)



நீர்ப்பாசன அமைச்சு மற்றும் உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷவினால் வட மாகாணத்திற்கான “வாரி சௌபாக்கியா” திட்டத்தின் இணைப்பாளராக திருமதி பவதாரணி ராஜசிங்கம் நேற்றுமுன்தினம் நியமக்கப்பட்டார்.

(படம்: சிவசாந்தன்)



சாவகச்சேரி நுணாவில் கிழக்கு ஞானவைரவர் ஆலய மகாகும்பாபிஷேகம் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவைப்படின் ஹோட்டல்கள் சிகிச்சை மையங்களாக மாறும்

(கொழும்பு)

கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான இட வசதிகள் தொடர்பில் அச்சப்பட வேண்டாமென இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன், வைத்தியசாலைகளில் கொவிட்-19 சிகிச்சைகளுக்காக வசதிகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேவை ஏற்படின் தெரிவு செய்யப்பட்ட சுற்றுலா ஹோட்டல் களை கொவிட்-19 சிகிச்சை மையங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)


## வேலைக்கு பணியாளர் தேவை

மின்சார நிலைய வீதி, சுன்னாகத்தில் அமைந்துள்ள சுன்னாகம் ப.தெ.வ. அ.கூ.சங்கத்தின் கள் போத்தல் அடைப்பு தொழிற்சாலையில் போத்தல் கள் அடைப்பதற்கு 18-45 வயதிற்குட்பட்ட ஆண்கள்/ பெண்கள் தேவைப்படுகின்றனர்.

வேலையில் இணைந்து கொள்வோருக்கு வேலை செய்யும் நாள் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுவதோடு ஊழியர் சேமலாபநிதி **(EPF)**. ஊழியர் நம்பிக்கை நிதி **(ETF)** என்பன சங்கத்தினால் வழங்கப்படும்.

கடமை நேரம் காலை 8.30 மணி- மாலை 4.30 மணி வரை ஆகும்.

விரும்புவோர் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் அல்லது முகவரியு டன் தொடர்புகொண்டு சம்பளம் மற்றும் மேலதிக விபரங்களை அறிந்து கொள்ளவும்.

**தொலைபேசி இல: 021 224 0024/ 021 224 0022/ 077 020 4378/ 077 104 2116**

(C-2073)

தலைவர், ப.தவராசா
சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்


# குளிரூட்டப்பட்ட இடங்கள் ஆபத்தானவை- சுதத் சமரவீர

(கொழும்பு)

**குளிரூட்டப்பட்ட அலுவலகங்கள் அல்லது இடங்களில் கடமைகளைச்செய்யும்போது ஒருவர் எப்போதும் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் என்று தொற்று நோயியல் பிரிவின் தலைமைத் தொற்றுநோயியல் நிபுணர் டாக்டர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.**



தற்போதைய கொவிட்-19 நிலைமைகளுக்கு மத்தியில் மூடிய அறைகளுக்குள் தொழில் செய்வது மிகவும் ஆபத்தானது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஒரு நபர் ஜன்னல்கள் மற்றும் கதவுகளை மூடியி ருக்கும் ஒரு சிறிய அறையில் இருந்தால், குறிப்பாக குளிரூட்டப்பட்ட பகுதியில், இந்த நோய் மற்றொரு நபருக்கு பரவ அதிகம் வாய்ப்புள்ளது.

எனவே இது போன்ற இடங்களில் ஜன்னல்கள் மற்றும் கதவுகளை முடிந்த வரை திறந்து வைக்குமாறு பரிந்துரைக்கிறோம்.

மேலும் அத்தகைய இடங்களில் முகக் கவசம் அணிவது, கைகளை சவர்க்காரமிட்டு கழுவுதல் போன்ற சுகாதார வழிகாட்டல்களை அவசியம் கடைப்பிடிக்குமாறும் வலியுறுத்துவதாக அவர் தெரிவித்தார். (நி-4)


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

### சந்தை இறைச்சிக் கடைக்கான 01.05.2021- 31.12.2021 வரையுள்ள காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலக் கேள்வி அறிவித்தல்-2021

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தை, இறைச்சிக் கடைகளினை 01.05.2021-31.12.2021 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலக்கேள்விகள், 27.10.2020 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளிற்கு அமைவாக கோரப்படுகின்றன.

ஏலம் 07.05.2021 காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் கேள்வி வைப்புப் பணத்தினை செலுத்தி பற்றுச் சீட்டினை 30.04.2021 தொடக்கம் 07.05.2021 முற்பகல் 10.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.


| தொ.இல | குத்தகை விபரம் | 2021ஆம் ஆண்டு ஆகக் குறைந்த ஏலக் கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புபணம். | மாதவாடகை |
|---|---|---|---|---|
| | **கட்டைவேலி உப அலுவலகம்** | | | |
| 1 | துன்னாலை வடக்குச்சந்தை | 38,800.00 | 400.00 | - |
| | **உடுப்பிட்டி உப அலுவலகம்** | | | |
| 1 | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 436,400.00 | 4500.00 | 100.00 |
| 2 | மண்டான் சந்தை | 28,700.00 | 300.00 | - |

இதற்கான ஏலக் கேள்வியில் கலந்துகொள்பவர்கள் மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணத்தினை 07.05.2021 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் செலுத்துவதுடன், சித்திகரக் கேள்விக்காரர் உடனடியாக ஏலத்தொகையின் 1/3பங்கு பாதுகாப்பு வைப்புப் பணத்தை செலுத்தி ஒப்பந்தம் செய்யவேண்டும். பாதுகாப்பு வைப்புப் பணம் உடனடியாக செலுத்தத் தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு குத்தகை வழங்கப்படும்.

(C-2-072)

க.த.ஐங்கரன், தவிசாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.


# பள்ளத்தில் பாய்ந்த பேருந்து பயணித்த 30 பேர் காயம்



(நுவரெலியா)

ராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாகுடுகலை பிரதேசத்தில் பேருந்து ஒன்று பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று இடம்பெற்ற இவ்விபத்தில் பேருந் தில் பயணித்த 15 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹைபொரஸ்ட் பிரதேசத்திலிருந்து ராகலை நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்துக்குள்ளான பேருந்தில் பயணித்த பயணிகள் காயமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு அவர்களில் ஐவர் அவசர சிகி ச்சைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சாரதிக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்டதால், கட்டுப்பாட்டை இழந்த பேருந்து இவ்வாறு குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக ஆரம்பக்கப்பட்ட விசார ணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ராகலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-4)

# நிரம்பி வழியும் சிகிச்சை நிலையங்கள்

(கொழும்பு)

மத்திய மாகாணத்திலுள்ள அனைத்து கொவிட்- 19 சிகிச்சை நிலையங்களில் நோயாளிகள் நிறைந்துள்ளதாக அந்த மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நிஹால் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக மேலதிகமாக சில சிகிச்சை நிலையங்களை ஏற்படுத்தும் தேவை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு பயணம் செய்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள்



(மன்னார்)

**மன்னார் மாவட்டம் தற்போதைய சூழ்நிலையில் பாதுகாப்பாக உள்ள போதிலும், நாங்கள் கவனம் இன்றி நடந்து கொண்டால் எதிர்வரும் நாட்களில் நாங்கள் பார தூரமான நிலையை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என சுகாதாரத்துறையினர் எச்சரித்துள்ளனர்.**

எனவே மக்கள் உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயணம் செய்பவர்களுக்கு போக்குவரத்துத்துறையினர் உரிய சுகாதார நடைமுறைகளை அறிவுறுத்தி போக்குவரத்து சேவைகளை மேற்கொள்வதோடு, பேருந்துகளின் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாத்திரமே பயணிகளை ஏற்ற வேண்டும் என்பதோடு, பயணம் செய்பவர்கள் முகக்கவசம் அணிவதை பேருந்தின் சாரதி, நடத்துநர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்தியாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக தலைமன்னார் பகுதிக்கு வந்த 4 நபர்களை கடற்படையினர் கைது செய்தனர். அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்ட போது அவர்களில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் மீனவர்களுக்கு உரிய ஆலோசனைகளையும், விழிப்புணர்வையும் வழங்க ஆலோசித்துள்ளோம்.


மீனவர்களின் கிராமங்களுக்குச் சென்று கொரோனாத் தொற்று தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கவும், இந்தியாவில் தற்போது ஏற்பட்டுள்ள மிக பாரதூரமான சூழலை அவர்களுக்கு தெளிவுபடுத்தி அந்தச் சூழல் எமது மாவட்டத்தின் ஊடாக இலங்கைக்குள் நுழையாத வகையில் தடுத்து நிறுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

எனவே பொது மக்கள் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை உரிய முறையில் பின்பற்ற வேண்டும் எனத் தெரிவித்தார்.

குறிப்பாக இந்தக் காலங்களில் மன்னாரில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு சுற்றுலா பயணங்கள் மேற்கொள்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கூடுதலாக ஒன்று கூடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் ஒவ்வொரு நபரும் இந்த விடயங்களில் கவனம் எடுத்து செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (5-4-285)

# 42 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது



(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்மடு நகர் சம்பக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் 42 லீற்றர் கசிப்புடன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் விற்பனைக்கு தயார் நிலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 42 லீற்றர் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் விசாரணைகள் மேற்கொண்டபின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (5-4-316)

# அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்துவரும் சிறாட்டிக்குளம் மக்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு பறங்கி ஆற்றில் தொடர்கின்ற மணல் அகழ்வினால் மாந்தை கிழக்கின் சிறாட்டிக்குளம் முதன்மை வீதி சேதமடைந்துள்ளதாக சிறாட்டிக்குளம் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

சிறாட்டிக் குளம் கிராமத்தில் அறுபத்தைந்து குடும்பங்கள் வாழ்கின்றன. சிறாட்டிக்குளம் கிராம மக்கள் நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலைக்கு ஏழு கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டும். மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கு பதினைந்து கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டும். சிறாட்டிக்குளத்தில் இருந்து நட்டாங்கண்டல் செல்லும் முதன்மை வீதி பறங்கி ஆற்றில் மணல் அகழ்வில் ஈடுபட்டுள்ள டிப்பர்களினால் குன்றும் குழியுமாக மாறி உள்ளது. மழை காலங்களில் இவ்வீதியில் பயணிக்க முடியாது.

இங்கு யானைகளின் தொல்லையும் கூடுதலாகக் காணப்படுகிறது. யானை வேலிகளை அமைத்துத் தருமாறு மாந்தை கிழக்கு பிரதேச செயலகக் கூட்டங்களில் கோரிக்கை விடுத்தும் யானை வேலிகள் அமைக்கப்படவில்லை. சிறாட்டிக் குளத்தில் இருபது வரையான குடும்பங்கள் வயல் நிலமின்றி வாழ்கின்றன.

கடந்த நல்லாட்சி காலத்தில் இக்கிராமத்தில் அமைக்கப்பட்ட பதினைந்து வீடுகள் மேலதிக நிதி கிடைக்காததன் காரணமாக அரை குறையாகவே காணப்படுகின்றது. ஒட்டு மொத்தத்தில் மாந்தை கிழக்கின் சிறாட்டிக்குளம் கிராம மக்கள் பல்வேறு நெருக்கடிகளுடன் வாழ்ந்துவருகின்றனர். (5-4-350)

# பாதுகாப்பான முறையில் கழிவுகள் அகற்றப்படும்

## பிரதேச சபைத் தவிசாளர்

(அக்கராயன்)

முல்லைத்தீவு நகரக் கழிவுகள் பாதுகாப்பான முறையில் இரு வாரங்களில் அகற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் கமலநாதன் விஜிந்தன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நகரக் கழிவுகள் பாதுகாப்பற்ற முறையில் அகற்றப்படுவதன் காரணமாக வாகனங்களில் இருந்து கழிவுகள் வீதிகளில் அடிக்கடி வீழ்ந்து கிடப்பது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு நகரக் கழிவுகள் நெடுங்கேணி வீதியில் பிரதேச சபையால் கொட்டப்படுகிறது. கழிவுகளை கொண்டு செல்லும் போது வீதிகளில் கழிவுகள் வீழ்ந்து கிடப்பது தொடர்பாக பொது மக்களினாலும் பிரதேச சபை அமர்வுகளில் உறுப்பினர்களினாலும் அடிக்கடி தெரிவிக்கப்பட்டாலும் பிரதேச சபையில் கழிவு அகற்றுவதற்கான வாகனப் பற்றாக்குறைகள் காணப்படுகின்றன.

மூன்று உழவு இயந்திரங்களுக்கு தற்போது பாதுகாப்பான கூடு அமைக்கப்பட்டு வருகின்றது. 15 நாட்களில் மூன்று உழவு இயந்திரங்களும் கழிவு அகற்றலில் பாதுகாப்பான முறையில் ஈடுபடும். ஏனைய மாவட்டங்களில் கழிவு அகற்றுவதற்கென பெரிய வாகனங்கள் உள்ளன.

ஆனால் நாம் வாகனப் பற்றாக்குறை காரணமாக உழவு இயந்திரங்கள் மூலம்தான் கழிவு அகற்றுகின்றோம் எனவும் தெரிவித்தார். (5-4-350)



முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியூதீனை விடுதலை செய்யக் கோரி நேற்று வியாழக்கிழமை மன்னார் பஜார் பகுதியில் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இப்போராட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (படம்: ஜோசப் நயன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

30.04.2021
சித்திரை 17, வெள்ளிக்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 12.35 மணிவரை
கேட்டை பிற்பகல் 4.58 மணிவரை
சுபநேரம் 5.58-7.28 மணிவரை
இராகுகாலம் 10.28-11.58 மணிவரை
சந்திராஷ்டமம்:-பரணி, கார்த்திகை
சங்கடஹர சதுர்த்தி விரதம்

வளவன்


மேஷம்

மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.


ரிஷபம்

சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், புதிய பொருட்சேர்க்கையுண்டு.


மிதுனம்

ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், வீட்டைப் பராமரிப்பதில் ஆர்வம் கூடும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், காரிய அனுகூலமுண்டு.


கடகம்

மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.


சிம்மம்

வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், வாகன சுகமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


கன்னி

கொடுக்கல்- வாங்கல் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், செய்தொழில் மேன்மையுண்டு.


துலாம்

உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், நிலையான வருமானத்திற்கு வழிபிறக்கும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


விருச்சிகம்

வழிபாட்டில் ஆர்வம் கூடும், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், விரும்பிய காரியங்கள் விரும்பியபடி கைகூடும், சிந்தனை மிகுதியான நாள்.


தனுசு

திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் ஏற்படலாம், விரயங்கள் மேலோங்கும் நாள்.


மகரம்

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.


கும்பம்

நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


மீனம்

வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பகைவர்கள் விலகுவர், அரைகுறையாக இருந்த பணியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

நல்ல அறிவுரை விலை மதிக்கத்தக்கது.

# நடமாடும் வைத்தியசாலைகளை உடன் அமையுங்கள்

## எதிர்க்கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

**நாட்டில் மருத்துவ கட்டமைப்பை ஸ்திரப்படுத்தும் வகையில் தீவிர சிகிச்சை பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதோடு நடமாடும் வைத்தியசாலைகளை உருவாக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவதாக பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.**



இலங்கையில் தற்போது நிலைமாறிய வீரியம் மிக்க வைரஸ் பரவ ஆரம்பித்துள்ளது. சிவப்பு எச்சரிக்கை காணப்படும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது.

எனவே இப்போதாவது தீவிர சிகிச்சை பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு கோருகின்றோம். அத்தோடு நடமாடும் வைத்தியசாலைகளையும் நிறுவுமாறு வலியுறுத்துகின்றோம்.

அத்தோடு மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகளையும் மேலதிகமாக கொள்வனவு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இலங்கையில் மருத்துவ கட்டமைப்பை ஸ்திரப்படுத்த உதவுமாறு நட்பு நாடுகளின் தூதுவர்களுடனான சந்திப்பின் போது கோரிக்கை விடுத்துள்ளோம் எனத் தெரிவித்தார். (நி-4)

# நனோ- வடிகட்டுதல் முகக்கவசங்கள் அறிமுகம்




(கொழும்பு)

பேராதனை பல்கலைக் கழகத்தின் மருத்துவவியல் ஆராய்ச்சி குழுவினால் புதிய கொவிட்-19 சோதனைக் கருவி மற்றும் முகமூடிகள் உருவாக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை ச.தொ.ச. மற்றும் அரச வர்த்தக பொதுக் கழகங்கள் வழியாக இதனைச் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

எந்தவொரு வைரஸ் அல்லது பக்றீரியாவையும் கொல்லக்கூடிய நனோ-வடிகட்டுதலை முகக்கவசம் கொண்டுள்ளதாகவும், இவற்றை குறைந்தது 25 முறை கழுவி பயன்படுத்தக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-4)

# மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கொன்சியூலர் விவகாரப் பிரிவு

(கொழும்பு)

தற்போதைய கொவிட்-19 தொற்று நிலைமை மற்றும் அண்மையில் வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்கள் ஆகியவற்றின் காரணமாக, எமது சில கொன்சியூலர் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் வழங்கப்படும் என வெளிநாட்டு அமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு குறிப்பிட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, சேவைகளைப் பெறுவதற்காக வெளிநாட்டு அமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவுக்கு வருகை தருபவர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு ஆகியன நாங்கள் முன்னுரிமையளிக்கும் பிரதான அம்சங்களாகும்.

எனவே, எதிர்வரும் வாரங்களில், கொன்சியூலர் விவகாரப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள், அவசரமான தேவைகளையுடையவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.


வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களின் மரணங்கள் சார்ந்த விடயங்கள், ஏற்றுமதி ஆவணங்கள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஏனைய சான்றிதழ்களுக்கு சான்றளித்தல் ஆகியன தவிர்ந்த கொன்சியூலர் சேவைகள் கட்டாயமான முன் நியமனத்தின் அடிப்படையில் மாத்திரம் வழங்கப்படும்.

முன் நியமனங்களை மேற்கொள்வதற்காக 011 233 5942, 011 233 8836 மற்றும் 011 233 8812 ஆகிய தொலைபேசி இலக்கங்களில் அல்லது **consular @mfa.gov.lk** என்ற மின்னஞ்சல் முகவரியினூடாக தொடர்பு கொள்ளவும். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உண்மையைச் சொல்கிறேன்



வெகு காலத்துக்கு முன் பழமுதிர் சோலை என்ற நாட்டை மன்னன் பழவர்த்தன் ஆண்டு வந்தார்.

அவர் நீதி நெறி தவறாதவர் வாய்மை நிரம்பியவர் உண்மை பேசுபவர். தன்னைப்போலவே தன் குடிமக்களும் இருக்க வேண்டும் என்று விரும்புபவர். அவருக்கு திருமணமாகி நீண்ட நாட்களாகியும் குழந்தைகள் இல்லை.

தனக்கு பின் தன் நாட்டை ஆளத் தக்க வாரிசுகள் இல்லாததால், தன் நாட்டு மக்களில் நீதியும், நேர்மையும் தவறாத உண்மையான ஒரு இளைஞனைக் கண்டுபிடித்து, அவனை மன்னனாக்க வேண்டும் என்று விரும்பினார்.

இதற்காக யாருடைய ஆலோசனையையும் நாடவில்லை. அவரே மிகச் சிறந்த அறிவாளியாக இருந்த படியினால், பல நாட்கள் யோசித்து ஒரு முடிவு செய்தார்.

நாட்டில் உள்ள வீரம் மிக்க இளைஞர்களை அழைத்து வில்போட்டி நடத்தினார். அதில் வென்றவர்களை அழைத்து, வாள் போட்டி நடத்தி பரிசீலனை செய்தார்.


அதன்பின், வாய்மொழிக் கேள்விகள், சமயோசிதமான கேள்விகள் என்று ராணுவத்துக்கு ஆள் எடுப்பதைப்போல அவர்களைச் சோதித்தார்.

கடைசியாக, பத்து இளைஞர்கள் தேறினர். அவர்களை மன்னர் அழைத்து, அவர்கள் அனைவரிடமும் தனித்தனியாக ஒரு செடியின் விதையைக் கொடுத்தார்.

"இந்த விதையை ஒரு தொட்டியில் போட்டு வளர்த்து, கவனமுடன் கண்காணித்து, ஆறு மாதம் சென்ற பிறகு, வளர்த்த செடியுடன் என் முன் வர வேண்டும். இதுதான் நான் உங்களுக்கு வைக்கக் கூடிய இறுதி கட்டச் சோதனை" என்றார்.

(தொடரும்)

# மகாபாரதம்




தருமர் சாத்திரச் சுவடியும் தர்ப்பைப் புலலும் கொண்டு கங்கன் எண்ணும் பெயருடன் விராடனைச் சந்தித்தார்.

விராடனும் அவரது நட்பு தனக்குத் தேவை என அவரை தன்னிடமே இருக்க வேண்டினான்.

பின் பீமன் ஒருநாள் வந்து தன் பெயர் வல்லன் என்றும் தனக்கு சமையல் வேலை தெரியும் என்றும் யுதிஷ்டர் இடத்தில் சமையல் காரனாய் இருந்ததாகவும் கூறினான்.

அவன் பேச்சில் நம்பிக்கை ஏற்பட விராடனும் அவனை அரண்மனை சமையல்காரர்களுக்கு தலைவனாக இருக்கட்டளையிட்டான்.

திருநங்கை வடிவில் வந்த அர்ச்சுனனோ தன் பெயர் பிருகன்னளை என்றும் தான் ஆடல் பாடல்களில் பயிற்சி பெற்றுள்ளதாகவும் மன்னரின் மகளுக்கு நல்லிசையும் , நாட்டியமும் கற்றுத்தரத் தயார் என் [illegible]

பின் வந்த நகுலன் "தாமக்கிரந்தி" என்பது தன் பெயர் என்றும் குதிரைகள் இலக்கணம் தனக்குத் தெரியும் என்றும் யுதிஷ்டரின் குதிரைகளை அடக்கிய அனுபவம் உண்டு என்றும் கூற விராடன் குதிரைகளை காக்கும் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தான்.

சகாதேவன் தந்திரிபாலன் என அங்கு வந்தான். தான் பாண்டவ ர்களின் பசுக்கூட்டத்தை அக்கறையுடன் கவனித்துக் கொண்ட அனுபவத்தைக் கூற மன்னனும் அந்தப் பணியை அவனுக்குக் கொடுத்தான்.

திரௌபதியோ சைரந்திரி என்ற பெயருடன் வந்தாள். தன்னை ஒரு வேலைக்காரி என்று ராணியார் சுதேட்சணையிடம் அறிமுகம் செய்து கொண்டாள்.

தனக்கு ஐந்து கந்தர்வர்கள் கணவர்கள் என்றும் ஒரு சாபத்தால் பிரிந்திருப்பதாகவும் உரைத்தாள். இந்த பிரிவு ஓராண்டுகள் மட்டுமே என்றாள்.

ஆனால் அரசமாதேவியோ "பெண்ணே! உன் அழகு பிற ஆடவரால் உன் கற்புக்கு பங்கத்தை ஏற்படுத்தி விடுமோ என அஞ்சுகிறேன்" என்றாள்.

"அரசியாரே! தாங்கள் கவலைப்பட வேண்டாம். என் கணவர்கள் வெளித்தோற்றத்திற்கு தெரியமாட்டார்களே தவிர என்னை உயிர் போல் பாதுகாப்பர்.

எவராவது என்னிடம் முறை தவறினால் கொல்லப்படுவார்கள்" என திரௌபதி உரைத்தாள்.

பாண்டவர் தேவிக்கு ஒப்பனை செய்த அனுபவம் உண்டு என்றும் அரசிக்கு அப்பணியை செய்வதாகவும் உரைத்தாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவின் உக்கிர தாண்டவம்

# திண்டாடும் இந்திய மக்கள்

## 8 ஆவது நாளாக 3 இலட்சத்தை கடந்த தொற்று

(டில்லி)

**இந்தியாவில் கொரோனாத் தொற்று நோய் நெருக்கடி சற்றும் குறையாமல் தொடர்ந்தும் மோசமடைந்து வருகிறது. உலகில் எங்கும் இல்லாதவாறு நேற்று முன்தினம் மட்டும் 3 இலட்சத்து 79 ஆயிரத்து 257 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.**





இந்தியாவில் ஒரு நாள் மிக அதிகளவு கொரோனா மரணங்களும் நேற்று முன்தினம் பதிவாகின. நேற்று முன்தினம் 3 ஆயிரத்து 645 பேர் உயிரிழந்துள்ளதாக இந்திய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

8 ஆவது நாளாக 3 இலட்சத்துக்கும் அதிகமான தொற்று நோயாளர்கள் பதிவான நிலையில் இந்தியாவில் மொத்த கொரோனாப் பாதிப்பு ஒரு கோடியே 83 இலட்சத்து 76 ஆயிரத்து 524 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாவுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 4 ஆயிரத்து 832 ஆக உயர்ந்துள்ளது.

இதுவரை கொரோனாப் பாதிப்பிலிருந்து மீண்டு வந்தவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 50 இலட்சத்து 86 ஆயிரத்து 878 ஆக பதிவாகியுள்ளது. நேற்று முன்தினம் ஒரே நாளில் 2 இலட்சத்து 69 ஆயிரத்து 507 பேர் குணமடைந்து வீடு திரும்பினர். (நி-4-8)

## இந்தியாவுக்கு கைகொடுக்கும் கனடா



(ஒட்டாவா)

கொரோனாவுக்கு எதிரான போரில் இந்தியாவுக்கு 10 மில்லியன் டொலர்களை வழங்க உள்ளதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், "தற்போது இந்திய மக்கள் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டு வருகின்றனர். அம்புலன்ஸ் முதல் பாதுகாப்பு உபகரணங்கள் வரை வாங்குவதற்கு 10 மில்லியன் டொலரை இந்தியன் ரெட் கிராஸ் அமைப்புக்கு வழங்கியுள்ளோம்.

மேலும் கூடுதல் மருத்துவ உதவிகளை வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகின்றன" என்று அவர் தெரிவித்தார். (நி-4-8)

## இந்தியாவுடன் துணைநிற்கும் சுவிட்சர்லாந்து

(சூரிச்)

ஐரோப்பிய நாடான சுவிட்சர்லாந்து இந்தியாவுக்கு ஒட்சிசன் மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்க முன்வந்துள்ளது. மேலும் இந்த சவாலான சூழ்நிலையில் இந்தியாவுடன் துணை நிற்போம் என்றும் சுவிட்சர்லாந்து அரசு தெரிவித்துள்ளது என சுவிட்சர்லாந்து தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டப்பட்டுள்ளது. (நி-4-8)

## 3 ஆயிரம் தொற்றாளர்களைக் காணவில்லை

# தேடுதல் வேட்டையில் பொலிஸார்

(டில்லி)

இந்தியாவில் பெங்களூரில் கொரோனா அதிகரித்து வரும் சூழ்நிலையில், 3000 கொரோனாத் தொற்றாளர்கள் காணாமல் போயுள்ளனர்.


இவ்வாறு காணமால்போனவர்கள் தங்கள் தொலைபேசி இயக்கத்தை நிறுத்தி வைத்துள்ளார்கள். அவர்களைத் தேடும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் கர்நாடக மாநில சுகாதார அமைச்சர் டாக்டர் கே.சுதாகர் தெரிவிக்கையில், கடந்த ஒரு வருடகாலமாக கொரோனா நோயாளிகள் காணாமல் போவது தொடர்பான பிரச்சினை இடம்பெற்று வருகிறது.

கொரோனா பாதித்தவர்கள் காணாமல் போவது கடந்த ஓராண்டாக நடைபெற்று வருகிறது. மக்களுக்கு இலவசமாக மருந்துகளை கொடுக்கிறோம். இதன்மூலம் 90 சதவீதம் பேர் குணமடைகிறார்கள். ஆனால் கொரோனா பாதித்தவர்கள் தங்கள் தொலைபேசி இயக்கத்தை நிறுத்தி வைத்து விடுகிறார்கள்.

பின்னர் மோசமான நிலையில் வைத்தியசாலைக்கு வருகிறார்கள். அவர்களுக்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் படுக்கை வசதிகள் கிடைப்பது கடினமாகிறது. இதுதான் இந்த மாநிலத்தில் நடக்கிறது என அவர் தெரிவித்தார். (நி-4-8)

## விண்வெளி வீரர் காலமானார்




(வோஷிங்டன்)

சந்திரனில் தரையிறங்கிய அப்பலோ 11 பயணத்தின் உறுப்பினரான விண்வெளி வீரர் மைக்கேல் கொலின்ஸ் புற்றுநோயுடன் போராடி வந்த கொலின்ஸ் நேற்று முன்தினம் புதன்கிழமை உயிரிழந்ததாக அவரது குடும்பத்தார் டுவிட்டரில் தெரிவித்துள்ளனர்.

விண்வெளி நிறுவனத்தை விட்டு வெளியேறிய பின்னர், அவர் தேசிய விமானம் மற்றும் விண்வெளி அருங்காட்சியகத்தின் இயக்குநராகவும் ஸ்மித் சோனியன் நிறுவனத்தின் துணைச் செயலாளராகவும் பணியாற்றினார். (நி-4-8)

## 3 மாதங்களில் 500 ஒட்சிசன் ஆலைகள்;

# இராணுவ மந்திரியின் அதிரடி தகவல்



(டில்லி)

கொரோனா நோயாளிகளுக்காக டி.ஆர்.டி.ஓ.சார்பில் 3 மாதங்களில் 500 ஒட்சிசன் ஆலைகள் அமைக்கப்படும் என இராணுவ மந்திரி ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

கொரோனா சிகிச்சையில் ஒட்சிசன் முக்கிய பங்கு வகிப்பதால் அதன் தேவை அதிகரித்து வருகிறது. டில்லி உள்ளிட்ட சில மாநிலங்களில் ஒட்சிசன் பற்றாக்குறையால் நோயாளிகள் மரணத்தை தழுவும் அவலத்தையும் காண நேர்ந்தது.

இதையடுத்து பிரதமர் கொரோனா நிதியின்கீழ், அரச மருத்துவமனைகளில் 551 ஒட்சிசன் ஆலைகள் நிறுவ பிரதமர் மோடி கடந்த 25 ஆம் திகதியன்று முடிவு எடுத்தார்.

இந்த நிலையில் மத்திய இராணுவ அமைச்சகத்தின் கீழ் செயற்படும் டி.ஆர்.டி.ஓ. என்னும் இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு, பிரதமர் கொரோனா நிதியின்கீழ் 3 மாதங்களில் 500 மருத்துவ ஒட்சிசன் ஆலைகளை நிறுவும் என இராணுவ மந்திரி ராஜ்நாத் சிங் நேற்று முன்தினம் அறிவித்தார்.

பெங்களூரைத் தளமாகக் கொண்ட டாட்டா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட், கோயம்புத்தூரில் உள்ள டிரைடன்ட் நியூமேட்டிக்ஸ் ஆகியவற்றுக்கு எம்.ஓ.பி.தொழில்நுட்பம் மாற்றப்பட்டுள்ளது. இவ்விரு நிறுவனங்களும் 380 ஒட்சிசன் ஆலைகளை நிறுவும்.

எம்.ஓ.பி.என்பது நிமிடத்துக்கு ஆயிரம் லீற்றர் ஒட்சிசன் உற்பத்தி செய்யக்கூடிய தொழில்நுட்பம் ஆகும். இந்த தொழில்நுட்பத்தை டி.ஆர்.டி.ஓ.அமைப்புதான் வடிவமைத்துள்ளது.

மேலும், நிமிடத்துக்கு தலா 500 லீற்றர் உற்பத்தி செய்யக்கூடிய 120 ஆலைகளை உத்தரகாண்ட் மாநிலம், டேராடூனில் உள்ள இந்திய பெற்றோலிய நிறுவனத்துடன் இணைந்து செயற்படும் தொழில் நிறுவனங்கள் நிறுவும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (நி-4-8)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :-3 166 902**

**தொற்று :-150 336 400**


**(நேற்றைய நிலவரம்)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியாவிற்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும்-இராதாகிருஷ்ணன்

(கொழும்பு)

**மாகாணசபைத் தேர்தலை நடத்த தயார் என்று அரசாங்கம் கூறினாலும், ஆளுங்கட்சிக்குள்ளேயே இதில் பல முரண்பாடுகள் காணப்படுகின்றன. எத்தகைய சிக்கல் காணப்பட்டாலும் இந்தியாவிற்கு வழங்கியுள்ள வாக்குறுதிக்கமைய மாகாணசபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்பட வேண்டும்.**



எதிர்க்கட்சி என்ற ரீதியில் தொடர்ச்சியாக இதனை நாம் வலியுறுத்துவோம் என்று பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் ,

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என்று கூறுகின்ற போதிலும், அதனை எந்த முறைமையில் நடத்துவது என்பது பிரச்சினையாகக் காணப்படுகிறது. இந்த பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கு அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்படுகிறதா என்ற சந்தேகம் எழுகிறது.

இந்தியாவிற்கு அளித்துள்ள உறுதியை நிறைவேற்றும் வகையிலும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் மாகாணசபை விவகாரத்தில் தீர்க்கமானதொரு முடிவை அரசாங்கம் வழங்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# 5000 ரூபாவிற்காக பயணக் கட்டுப்பாடுகளை விதிக்கவில்லை-அஷோக அபேசிங்க

(கொழும்பு)

நாட்டில் தற்போது கொவிட் பரவல் தீவிரமடைந்துள்ள போதிலும் பி.சி.ஆர். பரிசோதனைகள் அதிகரிக்கப்படவில்லை. போக்குவரத்து கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை. மக்களுக்கு 5000 ரூபாய் கொடுப்பனவு வழங்க வேண்டியேற்படும் என்ற அச்சத்திலேயே அரசாங்கம் போக்குவரத்து கட்டுப்பாடுகளை விதிக்காமலுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் அஷோக அபேசிங்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை அவர் தெரிவித்தார். (நி-4)

# அபாய வலயங்கள் தொடர்பான தகவல்களை உடனே வெளியிடவேண்டும்

(கொழும்பு)

நாட்டில் கொரோனா பரவல் அதிகரித்துள்ள ஆபத்தான வலயங்கள் அடையாளப்படுத்தப்பட்ட வரைபடங்களை தொற்று நோயியல் பிரிவு உடனடியாக வெளியிட வேண்டும் என அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதன் ஊடாக மக்கள் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள முடியும் எனவும், ஆபத்து அதிகமான பிரதேசங்களுக்குச் செல்லும்போது மக்கள் மேலும் அவதானமாகச் செயற்படக்கூடியதாக இருக்கும் எனவும் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலம்பகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நாட்டை முடக்குவதற்கான திட்டம் இல்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ள போதிலும், அதிகரித்துவரும் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த கடுமையான தனிமைப்படுத்தல் விதிமுறைகளை அமுல்படுத்துவது அவசியமாகும்.

நாட்டில்இதுவரை கொரோனா பரவலில் தீவிரமான அதிகரிப்பு பதிவாகவில்லை. எனினும், நிலைமையைக் குறைத்து மதிப்பிட முடியாது. மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்காக மட்டுமே தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினால் வைரஸ் பரவுவதைக் கட்டுக்குள் வைத்திருக்க முடியும் என வைத்தியர் தெரிவித்தார். (நி-4)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2299

### திசா


**உலக வரலாற்றில் ஒரு பெண்ணின் வாயை மூட ஆணிற்கு கிடைத்த நல்ல சந்தர்ப்பம்..!!**



### ஐஸ்வர்யா




### தருண்




### குணேஸ்

**அடுத்தவன் பிரச்சியையை கேட்கும் போது 1008 தீர்வு தோனுது..**



**ஆனா நமக்குனு ஒரு பிரச்சினை வரும் போது ஒரு மண்ணாங்கட்டியும் தோணமாட்டேங்குது..**

### தனுசா




### மீனா




**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி தெரிவை அரசே தீர்மானிக்கும்-சுதர்ஷினி

(கொழும்பு)

**பொதுமக்கள் தாங்கள் விரும்பும் கொரோனா வைரஸ் தடுப்பூசியைத் தெரிவு செய்ய முடியாது என கொவிட் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.**

அதற்கு பதிலாக அவர்களுக்கு வழங்கப்படும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.



இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், "இலங்கை இதுவரை அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியைப் பயன்படுத்தியது. சீன சினோபார்ம் தடுப்பூசியின் பங்குகள் தற்போது இலங்கையில் உள்ளன. அதனை உள்ளூர்வாசிகள் பயன்படுத்த அனுமதிக்காக காத்திருக்கிறார்கள்.

ரஷ்யாவிலிருந்து வாங்கிய ஸ்புட்னிக் வி தடுப்பூசி விரைவில் இலங்கைக்கு வரவுள்ளது.

நாட்டில் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ள நிலையில், கையிருப்பிலுள்ள தடுப்பூசிகளைக்கொண்டு இரண்டாவது டோஸை செலுத்தும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் பொதுமக்கள் தாங்கள் விரும்பும் கொரோனா வைரஸ் தடுப்பூசியைத் தெரிவு செய்ய முடியாது" என அமைச்சர் தெரிவித்தார். (நி-4)

# நாட்டிற்கு வரவுள்ள ரஷ்ய ஹெலிகொப்டர்கள்

(கொழும்பு)

ரஷ்யாவின் உற்பத்திகளில் ஒன்றான எம்.ஐ -171 ரக 4 ஹெலிகொப்டர்களை அரசாங்கம் விரைந்து கொள்வனவு செய்ய தீர்மானித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய நாடுகளின் சமாதானப் படையணிக்கு வாடகைக்கு விடுவதற்காகவே இலங்கை அரசாங்கம் இந்த ஹெலிகொப்டர்களைக் கொள்வனவு செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தென்னிலங்கை ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.(நி-4)

# சுமார் 50 வீத மரணத்தையும் பரவும் வேகத்தையும் கொண்டது

## திரிபடைந்த வைரஸ் குறித்து அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

பிரிட்டனில் திரிபடைந்த கொரோனா வைரஸ் நாட்டின் பல பகுதிகளில் பரவியதுடன், இவை 55 வீத மரணத்தையும் 50 வீத பரவும் வேகமும் கொண்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வைரஸ் தொடர்பில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஜீவ வாயு விஞ்ஞானத் துறை பணிப்பாளர் மருத்துவ நிபுணர் சந்திம ஜீவந்தர பல அதிர்ச்சித் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

கொழும்பு, குருநாகல், பொரலஸ்கமுவ போன்ற பிரதேசங்களில்கொரோனா வைரஸ் தொற்று நபர்களிடமிருந்து பெறப்பட்ட மாதிரி மூலமாக பிரிட்டனின் திரிபு வைரஸ் இலங்கையில் பரவியுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது. அது 50 வீதத்தை விட மிக வேகமாகப் பரவும் தன்மை கொண்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மக்கள் எச்சரிக்கையாக செயற்பட வேண்டும்.

இந்த வைரஸை கட்டுப்படுத்த அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியானது சிறந்த பெறுபேற்றை தந்துள்ளது. அனைவரும் தடுப்பூசியை செலுத்திக் கொள்வதன் மூலம் இதற்குத் தீர்வைக் காண முடியும்.

ஆனால், எதிர்வரும் இரண்டு மூன்று மாதங்கள் இலங்கைக்கு மிகவும் தீர்மானமிக்க காலப் பகுதியாகும். கடந்தகாலத்தில் ஓரளவு பாதகமற்ற வைரஸ்தான் இருந்தது. புதிய வகை வைரஸானது மிகவும் ஆபத்தானது.

புதிய வகை வைரஸ் பரவியுள்ள நாடுகள் அனைத்தும் பாரிய இழப்புகளை சந்தித்துள்ளன. கடந்த ஜனவரி மாதத்தில்தான் பிரிட்டனில் இந்த வைரஸ் கண்டறியப்பட்டது. அங்கு பாரிய மரணங்கள் ஏற்பட்டுள்ளன. தடுப்பூசியின் ஊடாக ஓரளவு தீர்வை கண்டுள்ளனர் என மருத்துவ நிபுணர் தெரிவித்தார். (நி-4)

# 1.2 கோடி ரூபாய் பெறுமதியான அழகு சாதனப் பொருட்கள் சிக்கின

(கொழும்பு)

மூன்று கொள்கலன்களின் மூலம் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட விலையுயர்ந்த ஒரு தொகை அழகுசாதனப் பொருட்கள் மற்றும் பாதணிகளை நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தில் சுங்கம் பறிமுதல் செய்துள்ளது.

அவற்றின் பெறுமதி சுமார் 1.2 கோடி ரூபாய் எனத் தெரிவிக்கப்படுகிறது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அது எங்கே இருக்கிறது?

ஒரு கடற்கரை ஓரம். அங்கே ஒரு சிறிய கிராமம். அந்த கிராமத்திலே ஒரு சிறிய பள்ளிக்கூடம் இருந்தது. கடற்கரை ஓரத்திலே உள்ள ஒரு விடுதியிலே ஓய்வுக்காக ஒருவர் வந்து தங்கியிருந்தார். பள்ளிக்கூடத்திலே ஏதோ ஒரு விழா நடந்து கொண்டிருந்த மாதிரி தெரிந்தது. உடனே அவர் அந்தப் பக்கமாக வந்தார். இங்கே என்ன நடைபெறுகிறது என விசாரித்தார்.

பள்ளி ஆண்டுவிழா நடைபெறுகிறது என்றார்கள். உள்ளே சென்றார். கண்காட்சி ஒன்று வைத்திருந்தார்கள். பள்ளிக்கூடத்திலே படிக்கிற மாணவர்கள் சொந்தமாக தயார் செய்த பொருட்களை கண்காட்சிக்கு வைத்திருந்தார்கள். அந்த ஊர் மக்கள் எல்லோரும் கூட்டம் கூட்டமாக சென்று பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இவரும் ஆர்வமாக அதையெல்லாம் பார்த்துக்கொண்டு சென்றார். ஒரு இடத்திலே சிறிய ரயில் செய்து வைத்திருந்தார்கள். மாணவர்களே தயார் செய்து வைத்திருந்தார்கள். மின்சாரத்திலே அது ஓடுவது மாதிரி செய்திருந்தார்கள். அதிலே ஒரு சிறிய பொத்தான் இருந்தது. அதை அழுத்தினால் ரயில் ஓடும். சுற்றி சுற்றி வரும்.

மாணவர்கள் எதிரிலே நின்று விளக்கம் கூறிக்கொண்டு இருந்தார்கள்.

இவர் அதை கவனித்தார். ரயில் ஓடுவதைப் பார்த்தார். அங்கே நின்று கொண்டிருந்த மாணவர்களிடம் விளையாட்டாகக் கேட்டார்.

"இந்த ரயில் எதனாலே ஓடுகிறது" என்று கேட்டார்.

"சக்தியினாலே ஓடுகிறது" என்றார்கள் மாணவர்கள்.

"அது என்ன சக்தி" என்றார்.

அதற்கு பெயர் "மின்சாரம்" என்றார்கள்.

"நீங்கள் மின்சாரத்தை பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"நாங்கள் பார்த்ததில்லை... ஆனால் இதை செய்வதற்கு எங்களுக்கு உதவி செய்த ஆசிரியர் ஒரு பட்டதாரி...ஒருவேளை அவர் பார்த்திருக்கலாம்" என்றார்கள்.

"அவர் எங்கே இருக்கிறார்?" என்றார்.

"இதோ அழைத்துக்கொண்டு வருகிறோம் என்று சொல்லிவிட்டு ஓடிப் போய் அவரை அழைத்துக்கொண்டு வந்தார்கள்" அவரிடம் கேட்டார் மின்சாரத்தை பார்த்திருக்கிறீர்களா? என்று

மின்சாரத்தை பார்ப்பதாவது? நான் பார்த்ததே இல்லை. நான் பார்த்தது அது செயற்படும் விதத்தைத்தான். அது விளக்கை ஒளிரச் செய்கிறது. ரயிலை ஓடும்படி செய்கிறது. அதேமாதிரி எத்தனையோ இயந்திரங்களைச் செயற்பட வைக்கிறது. ஆனால் உண்மையிலே அது என்னவென்று எனக்குத் தெரியாது. ஒருவேளை இந்தப் பள்ளிக்கூடத்து தலைமை ஆசிரியருக்குத் தெரிந்திருக்கலாம். ஏனென்றால் அவர் ஒரு மேல் நிலைப் பட்டதாரி என்றார் அவர்.

சரியென்று போய் தலைமை ஆசிரியரை கூட்டிக்கொண்டு வந்தார்கள். அவரிடமும் கேட்டார் இதே கேள்வியை. இதற்கு அவர்... மன்னிக்க வேண்டும். இந்தக் கேள்வியை இதுவரைக்கும் யாரும் கேட்டதில்லை. சக்தியை யாரும் பார்க்க முடியாது. ஆனால் அது செயற்படும் விதத்தைத்தான் பார்க்க முடியும் என்றார். இப்போது இதுவரைக்கும் கேட்டுக் கொண்டிருந்தவர் சிரித்தார். சிரித்துக்கொண்டே சொன்னார்... சரி அதற்காக ஒன்றும் கவலைப்படாதீர்கள். என்னுடைய பெயர் தோமஸ் அல்வா எடிசன் என்றார். இதைக் கேட்டதும் அங்கே இருந்தவர்களுக்கெல்லாம் அதிர்ச்சி, ஆச்சரியம்.

என்னது நீங்கள் தானா எடிசன்? நீங்கள் எவ்வளவு மின்சாரக் கருவிகளை உருவாக்கியிருக்கிறீர்கள். நீங்களா இந்தக் கேள்வியைக் கேட்பது? என்றார்கள். ஆமாம் நான் தான் கேட்கிறேன். ஏனென்றால் நானே மின்சாரத்தை பார்த்தது கிடையாது என்றார் அவர்.

அன்பு என்பது இப்படிப்பட்டதுதான் என்கிறார் ஓஷோ. அன்பு என்பது எமது உடற்கூறு அமைப்பிலே இல்லை. அது நமது உடம்பிலே உள்ள சுத்த சக்தியின் வெளிப்பாடு. அதை உணரத்தான் முடியும். பார்க்க முடியாது.

அன்பே உன்னை என் இருதயத்திலே வைத்திருக்கிறேன் என்றான் ஒருத்தன். இது வைத்தியர்கள் சொல்கின்ற இருதயம் அல்ல. அது இரத்தத்தை தள்ளுகின்ற ஒரு கருவி அவ்வளவுதான். ஞானிகள் சொல்கின்ற இதயம் வேறு. அது கண்ணுக்கு புலப்படாத ஒரு சக்தி.

என்னுடைய இதயம் ரொம்ப விசாலமானது சேர் என்றான் ஒருத்தன்.

அப்படியா என்றேன் ரொம்ப மரியாதையாக!

ஆமாம் வைத்தியரே அப்படித்தான் சொல்கிறார். கொஞ்சம் வீங்கிப் போய் பெரிதாக இருக்குதாம்! என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 27 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்



திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

இதுவரை காலமும் இப் பற்றாக் குறை காரணமாக சிறுவர் பகுதி, இரவல் வழங்கும் பகுதியின் ஒரு புறத்தில் செயற்பட்டு வந்தது. எரிக்கப் பெற்ற சிறுவர் நூலக புனருத்தாரண வேலைகள் யாவும் முடிவுற்றுள்ளமையினுள் சிறுவர் பகுதி தனக்குரிய இடத்திற்கு மாற்றப்படவுள்ளது. இதன் காரணமாக மேலும் இடவசதிகளைப் பெற்று இரவல் சேவை விஸ்தரிக்கப்படுகிறது. இரவல் வழங்கும் பகுதியில் போடப்பட்டுள்ள புத்தக இறாக்கைகள் யாவும் யாழ்.கிறிஸ்தவ சங்கத்தினது தாராள மனப்பான்மையால் கிடைக்கப் பெற்றவையாகும்.

கீழ்த்தள தென்பாகத்தில் உள்ள எரிக்கப்பெற்ற முன்னைய இரவல் வழங்கும் பகுதி, திருத்த வேலைகளின் பின்னர் மீண்டும் இரவல் வழங்கும் சேவையினை வாசகர்களுக்கு வழங்கவுள்ளது. 4,200 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட பகுதியாக இரவல் பகுதியினை விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

இப்பகுதி அங்கத்தவர்களுக்காக பொது விடுமுறை, திங்கட்கிழமை தவிர்ந்த ஏனைய வார நாட்களில் 8 மணி முதல் 19.30 மணி வரை தனது சேவையினை வழங்கி வருகின்றது.

### சிறுவர் பகுதி

பிரதான நூலகத்தினையும் புதிய கட்டடத்தையும் இணைக்கும் இரண்டாம் கட்டப் பகுதியில் இச் சிறுவர் நூலகம், புனருத்தாரண வேலைகளின் பின், தனது சேவையினைச் சிறார்கள் மத்தியில் செயற்பட ஆரம்பித்துள்ளது. சர்வதேச அரிமாக் கழகம் 306 "பி"யின் பெரும்பான்மை ஆதரவுடனும் றெட்பான நிறுவனத்தின் ஆதரவுடனும் புதுப்பொலிவு பெற்று இப்பகுதி காட்சியளிக்கின்றது.

மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் படிக்கும் 14 வயதுடையவர்களும், கீழ்ப்பட்டோரும், இப்பகுதியினைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுவர். பொது விடுமுறை, திங்கட்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் இந்நூலகம் சேவைக்காகத் திறக்கப்பட்டிருக்கும். பாடசாலை விடுமுறை தினங்களிலும் சனி, ஞாயிறு தினங்களிலும் 8.30 மணி தொடக்கம் 18.00 மணி வரை செயலாற்றும் இந்நூலகம் ஏனைய வார நாட்களில் 11.30 மணி தொடக்கம் 18.00 மணி வரையிலும் சேவைக்காகத் திறக்கப்படும்.

உயரம் குறைந்த புத்தக இறாக்கைகள், வகுப்புப் பொருள் வாரியாக நிரைப்படுத்தப்பட்டுள்ளது. கண்கவர் வண்ண வட்ட மேசைகளும் கதிரைகளும் சிறுவர்களை மகிழ்விக்கும் என்பதில் ஆச்சரியமில்லை. சிறுவர் நூலகத்திற்கு அருகே அமைக்கப்படவிருக்கும் சிறுவர் பூங்கா எல்லையில்லா மகிழ்ச்சியைச் சிறுவர்களிடையே தோற்றுவிக்கவுள்ளது. அத்துடன் சிறுவர்களை நூலகத்திற்கு ஈர்க்குமுகமாக நடத்தப் பெறும் விரிவு சேவைகளான சித்திர வேளை, கதை வேளை, கைப்பணிவேளை, கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி, பொது அறிவுப் போட்டி போன்ற ஏனைய போட்டிகள் யாவும் நடத்தப் பெறும். நூலகத்தினை, அறிவுக்கருவூலங்கள் மத்தியில் தோன்றியுள்ள கனவுலகமாகவே சிறுவர் கருதுவர்.

இரவல் வழங்கும் நூல்கள் மட்டுமன்றி, உடனுதவும் நூல்களான கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், பொது அறிவு நூல்கள் ஆங்கிலம், தமிழ் மொழிகளில் உண்டு.

சஞ்சிகைகளும், வார இதழ்களும் இப் பகுதியில் போடப்பட்டுள்ளன. வீடியோ படக்காட்சிகளும், சங்கீத மாலைகளும் சிறுவர்களுக்காக ஒழுங்குபடுத்தப்படவுள்ளன. இதற்கான உபகரணங்கள் கிடைத்தவுடன் இச் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும்.

### வாசிகசாலைப்பகுதி

புதினப் பத்திரிகைகளும் வார, மாத சஞ்சிகைகளும் அரசாங்க, தனியார் ஸ்தாபன வெளியீடுகளும் ஸ்தானிகராலயங்களால் இலவசமாக அனுப்பப் பெறும் சஞ்சிகைகளும் இப்பகுதியில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. 1981 ஆம் ஆண்டு நடைபெற்ற வன்செயலின் பின்னர் தற்காலிகமாக வாசிகசாலைப்பகுதி மாநகர சபை அறையொன்றினுள் ஆரம்பிக்கப்பட்டது. எரிக்கப் பெற்ற பிரதான நூலக வட பகுதி புனருத்தாரணம் செய்யப்பட்டுப் பொதுமக்களது பயனுக்காகச் சேவையிலிடப்படும் வரை தற்காலிக அறையொன்றினுள்ளேயே இப்பகுதி சேவையினை ஆற்றியது. புனருத்தாரண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் நூலக நடுத்தரைப் பகுதிக்கு மாற்றம் செய்யப்பட்டது.

பொதுமக்கள் தினசரிகளைத் தினந்தோறும் வாசிக்கும் வண்ணம் வாரத்தின் எல்லா நாட்களிலும் அரசாங்க பொது விடுமுறை தினங்கள் உட்பட 8 மணி முதல் 20.00 வரை இப் பகுதி சேவைக்கு விடப்பட்டுள்ளது. மும்மொழிகளிலும் இரு பிரதிகளில் புதினப்பத்திரிகைகள் போடப்படுவதுடன், ஜனரஞ்சகமானதும் பொது, முக்கிய சஞ்சிகைகளும் அரசாங்க வெளியீடுகளும் சந்தா முறையில் பெறப்படுகின்றன.

பழைய சஞ்சிகைகள் வாசிகசாலைப் பகுதி அங்கத்தவர்களுக்குத் தவணை முறையில இரவல் வழங்கப்படுகின்றது. இப்பகுதி புதிய கட்டடத் திறப்பு விழாவுடன் மாடி வடபாகத்திற்கு மாற்றம் செய்யப்படவுள்ளது. 2,100 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட இம்மண்டபம் பொது மக்களுக்கு வசதி கொண்ட ஆசனங்களையும் இயற்கையான வெளிச்சம், சுத்தமான காற்றோட்டத்தைக் கொண்டும் விளங்குமென்பதில் ஐயமில்லை.

### கேட்போர்கூடம்

புதிய கட்டடத்தின் கீழ்த்தளத் தென்பாகப் பகுதியில் இக்கேட்போர் கூடம் அமைக்கப்படவுள்ளது. 2,100 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட இம்மண்டபச் சுவர்கள் மரவேலைப்பாடுகளைக் கொண்டும், நிலத்தை சரிவாகவும் 200 வசதியான ஆசனங்களைக் கொண்டும் விளங்கவுள்ளது. இப்பகுதி விரிவுரைகள், கலந்துரையாடல்கள், காட்சிகள், படக்காட்சிகள் போன்ற ஏனைய தேவைகளுக்காக உபயோகப்படுத்தப்படும். பகல் வேளைகளிலும் படக்காட்சி காண்பிப்பதற்காகப் பலகணிகளுக்கத் திரைகள் இடப்படும்.

### வலது குறைந்தோர்க்கு

வலது குறைந்தோர்க்கான வசதிகளையும் புதிய கட்டடத்தில் ஆரம்பித்துள்ளோம். இதற்காகத் தாம் இயக்கும் வண்டிகளிலிருந்து நூலகத்திற்குள் உட்செல்ல சற்றே சாய்வான நிலத்தளம் கொண்ட சாய்வளைவு அமைக்கப்படுகிறது. இது காலப்போக்கில் வாசிகசாலைப்பகுதி, சிறுவர் பகுதி, இரவல் வழங்கும் பகுதி, கேட்போர்கூடம் ஆகிய பகுதிகளுக்கு விரிவாக்கப்படும்.

விழிப்புலன் இழந்தோர்க்குக் ஹெலன் கெல்லரது நாமம் என்றுமோர் வரப்பிரசாதமாகும். ஆகவே சிறிய அளவிலாயினும் "பிரெய்ல்" பகுதியொன்றினை ஆரம்பித்து விழிப்புலனற்றோர்க்கு வழங்குதல் எமது முக்கிய நோக்கமும் கடமையுமாகும்.

### நூற்களஞ்சியப் பகுதி

சிறுவர் நூலகத்திற்கு மேல் உள்ள பகுதியே களஞ்சிய அறையாகவுள்ளது. அரசாங்க வெளியீடுகளதும், பொது மற்றும் விசேட சஞ்சிகைகளதும், செய்தித்தாள்கள், துண்டுப் பிரசுரங்கள், அதிக பாவனையிலிடுபடுத்தப்படாத நூல்களும், ஆண்டறிக்கைகளும், பழைய இதழ்களும் இப்பகுதியில் மட்டை கட்டப்பட்டு உடனுதவும் பொருட்டுச் சேகரிக்கப்பட்டுள்ளன. திறந்த இறாக்கைகளில் இவைகள் ஒழுங்கு நிரையாக அடுக்கப்பட்டுள்ளன.

### உடனுதவும் பகுதி

பிரதான நூலக முதல்மாடி வடபாகத்தில் இப்பகுதி அமைந்துள்ளது. பொதுமக்கள் அனைவருக்கும் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி சேவையாற்றுகிறது. திறந்த இறாக்கைகளில் வகுப்பு நூல்கள் அடுக்கப்பட்டிருப்பதனால் வாசகர்கள் எவ்வித தடங்கலுமின்றி இலகுவில் நூல்களைப் பெற வழிவகுக்கப் பெற்றுள்ளது. அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், ஆண்டு நூல்கள், நூற்பட்டிகள், தேசப்படங்கள் போன்ற உடனுதவும் நூல்கள் தனி இறாக்கைகளில் வைக்கப்பட்டுள்ளன.

அன்பளிப்பாகக் கிடைக்கப் பெற்ற அநேக நூல்கள் ஆங்கில நூல்களேயாகும். தமிழ் நூல்கள் வாசகர்களது தேவையைப் பூர்த்தி செய்யுமளவிற்குப் போதியதாகவில்லை. மாணவர்கள் தமது பாடங்களுக்கேற்ற உடனுதவும் நூல்கள் தமிழ் மொழியில் இல்லாமை குறித்துக் குறைப்படுகின்றனர். ஆராய்ச்சி மாணவர்கள் போதிய அளவு விடயதானம் வழங்கும் ஆராய்ச்சி நூல்கள் இல்லையென அங்கலாய்க்கின்றனர். கிடைத்தற்கரிய தமிழ் நூல்கள் முதற்பதிப்பு நூல்களாகவும் அச்சில் இல்லாத நூல்களாகவும் இருப்பதனால் புத்தகசாலைகளில் கொள்வனவு செய்யும் வசதி இல்லை. இத்தகைய கிடைத்தற்கரிய நூல்களைத் தமிழ்க் குடிமக்களிடம் இருந்தே நூலகத்திற்குச் சேர்த்துக் கொள்ளல் அவசியமாகின்றது. ஆதலினால் கருணை உள்ளம் படைத்தவர்கள், நூலகத்தில் எரிக்கப் பெற்ற, மீண்டும் பெறற்கரிய நூல்களை உடன் உதவும் பகுதிக்கு வழங்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம். கையேட்டுப் பிரதிகளையும் ஓலைச் சுவடிகளையும் கூட நூலகம் ஏற்றுக் கொள்ள முன்வருகின்றது. விலை மதிப்புள்ள நூல்களைத் தந்துதவிய ஆசியா பவுண்டேசன் நிறுவனம், தூதரகங்கள், பிரிட்டிஷ் கவுன்சில், அமெரிக்க நிறுவன நூலகம், யாழ். ஐக்கிய கிறிஸ்தவ சங்கம், யாழ். பல்கலைக்கழக மாணவரவை, மற்றும் பொதுமக்கள், பாடசாலைகள், தனியார் ஸ்தாபனங்கள், அனைவருக்கும் பொதுமக்கள் சார்பில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமணத் தம்பதியருக்கு கொரோனா நிகழ்வில் பங்குபற்றியோர் தனிமைப்படுத்தலில்

(பண்டாரவளை)

அண்மையில் திருமண பந்தத்தில் இணைந்த புதுமணத் தம்பதியர் உட்பட மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டதை அடுத்து பண்டாரவளையில் 125 பேரை தனிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பண்டாரவளை - எல்ல பகுதியில் உள்ள பிரபல விருந்தகம் ஒன்றில் அண்மையில் இடம்பெற்ற திருமண நிகழ்வில் கலந்து கொண்டிருந்த மூன்று பேருக்கு கொவிட்-19 தொற்றுறுதியாகியுள்ளது.

குறித்த திருமண நிகழ்வில் பங்கேற்றிருந்த மணமகன், மணமகள் உள்ளிட்ட மூன்று பேருக்கே இவ்வாறு தொற்றுறுதியாகியுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து குறித்த திருமண நிகழ்வில் கலந்து கொண்டிருந்த 125 பேரை சுயதனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குறிப்பிட்டுள்ளனர். (நி-4)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரதமுறைகள்



### விரதங்கள்

## முக்தி தரும் வைகுண்ட ஏகாதசி



விரதங்களுள் சிறந்தது வைகுண்ட ஏகாதசி விரதம். இந்த விரதத்தை மேற்கொள்வது அஸ்வமேத யாகம் செய்யும் பலனைத் தரும் எனப் புராணங்கள் கூறுகின்றன.

நீடித்த ஆயுள், ஆரோக்கியம், நீங்காத செல்வம் ஆகியவற்றை அருளும் வைகுண்ட ஏகாதசி விரதம் மார்கழி மாதம் சுக்லபட்சம் பதினோராம் நாளன்று கொண்டாடப்படுகிறது.

காயத்ரி மந்திரத்திற்கு ஈடான மந்திரம் இல்லை. தாய்க்கு சமமான தெய்வங்கள் இல்லை. ஏகாதசியை மிஞ்சிய விரதம் இல்லை என்பது ஆன்றோர் வாக்கு. அந்த அளவிற்கு ஏகாதசி விரதம் சிறந்து விளங்குகிறது.

மாதந்தோறும் 2 ஏகாதசிகள் வரும். மொத்தம் ஒரு ஆண்டுக்கு இருபத்தைந்து ஏகாதசிகள் வருகின்றன. ஒவ்வொரு மாதமும் சுக்லபட்சம் (வளர்பிளை), கிருஷ்ணபட்சம் (தேய்பிறை) 11 ஆவது நாள் ஏகாதசி விரதம்.

"ஏகம்" என்றால் ஒன்று. "தசி" என்றால் பத்து என்று பொருள்படும். ஏகாதசி 11 ஆவது நாள். மற்ற ஏகாதசிகளை விட வைகுண்ட ஏகாதசி சிறந்தது.

ராவணனின் இன்னல்களை சகிக்க முடியாத தேவர்கள் பிரம்மாவுடன் வைகுண்டம் சென்று மார்கழி சுக்ல ஏகாதசியன்று நாராயணனை வணங்கி தங்கள் துன்பங்களைக் கூறினர்.

சுவாமியும் மனமிரங்கி அவர்களைக் காத்தருளினார். முக்கோடி தேவர்களின் துன்பத்தைப் போக்கியதால் வைகுண்ட ஏகாதசிக்கு "முக்கோடி ஏகாதசி" என்ற பெயரும் உண்டு.

தேவர்களும் அசுரர்களும் அமுதம் பெற வேண்டி இரவும் பகலும் விரதம் இருந்து பாற்கடலைக் கடைந்த போது அமுதம் வெளிப்பட்டது. துவாதசியன்று மகாலட்சுமி சமுத்திரத்தில் இருந்து வெளியே வந்து தேவர்களுக்குத் திருக்காட்சி அளித்து அவர்களுக்கு அருளாசி புரிந்தார்.

அன்று முதல் ஏகாதசி அன்று இரவும் பகலும் விரதம் இருந்து மகாவிஷ்ணுவை துதிப்போருக்கு இந்தப் பிறவியில் நிலைத்த புகழ், நோயற்ற வாழ்வு, நன்மக்கட்பேறு முதலியவற்றை பகவான் அளிப்பதோடு மறுபிறவியில் வைகுண்டவாசம் வழங்குவதாக புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

ஏகாதசி விரத மகிமை பற்றி பத்ம புராணத்தில் கூறப்படும் கதை வருமாறு,

திரேதா யுகத்தில் முரன் என்ற பெயரில் ஒரு கொடிய அரக்கன் வாழ்ந்து வந்தான். அவன் தேவர்களுக்கும் தவமுனிவர்களுக்கும் பல கொடுமைகள் செய்தான்.

அவனது தொல்லை தாங்க முடியாத தேவர்களும் முனிவர்களும் திருமாலிடம் சென்று முறையிட்டனர். அரக்கன் முரனை அழித்து தேவர்களைக் காக்க திருமால் முடிவு செய்தார். சக்கராயுதத்தைத் தாங்கியபடி முரனுடன் போரிடுவதற்காகப் புறப்பட்டுச் சென்றார்.

அரக்கனுக்கும் திருமாலுக்கும் கடும் போர் நடந்தது. ஆண்டவனின் சக்கராயுதத்திற்கு முன் அரக்கன் சக்தியற்றுப் போனான். இருந்தாலும் அவன் பல்வேறு மாய வடிவங்களில் போர் புரிந்தான். தினமும் காலையில் சூரிய உதயத்தில் இருந்து சூரியன் அஸ்தமனம் ஆகும் வரை போர் நடக்கும். (தொடரும்)

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## சுகாதார விதிமுறைகளை மீறிய 187 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்று முன்தினம் மேலும் 187 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 31 முதல் குறித்த குற்றச்சாட்டுக்காக இது வரையான காலப் பகுதியில் நாடு முழுவதும் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-4)

## போலி தகவல்களை பரப்பிய இளைஞன் கைது

(கம்பளை)

சமூக வலைத்தளங்களில் உண்மைக்குப் புறம்பான தகவல்களைப் பரப்பிய இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

கம்பளை பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞன் ஒருவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளான் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

புலனாய்வுப் பிரிவினரால் பெற்றுக் கொடுக்கப்பட்ட தகவலொன்றுக்கு அமைய இளைஞன் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இளைஞனின் கைபேசி பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். சம்பவம் தொடர்பில் கம்பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

## சீனா திரும்பினார் பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

இலங்கைக்கான இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்த சீன பாதுகாப்பு அமைச்சர் வெய் பெங்ஹ் நேற்று சீனா திரும்பினார்.

கடந்த 27 ஆம் திகதி இலங்கை வந்திருந்த அவர் நேற்று முன்தினம் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்டோரை சந்தித்து முக்கிய கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 150 | 140 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 135 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 140 | 120 |
| தக்காளி | 80 | 70 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 60 | 50 |
| கோவா | 120 | 150 | 140 | 120 |
| கரட் | 120 | 250 | 200 | 240 |
| பூசணி | 50 | 60 | 60 | 50 |
| புடோல் | 100 | 140 | 100 | 100 |
| வாழைக்காய் | 40 | 40 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 240 | 200 | 280 | 200 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 160 | 220 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 70 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 130 | 140 | 160 |
| பயற்றங்காய் | 150 | 100 | 80 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 70 | 80 | 100 |
| கறிமிளகாய் | 60 | 70 | 120 | 150 |
| முருங்கைக்காய் | 450 | 700 | 400 | 600 |
| போஞ்சி | 150 | 180 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 160 | 120 | 140 | 120 |
| கீரை - 1 பிடி | 80 | 50 | 60 | 80 |
| தேசிக்காய் | 140 | 130 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 200 | 180 | 200 |
| வெங்காயப்பூ | -- | 400 | 120 | 280 |
| முள்ளங்கி | 80 | 40 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 20 |
| ஈரப்பலா | -- | -- | 100 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் பொறுப்பற்ற செயல்; விரைந்து செயற்பட்ட சுகாதாரப் பிரிவினர்



(மன்னார்)

நானாட்டான் கமநல கேந்திர நிலையத்தில் சிறுபோக நெற் பயிர்ச் செய்கைக்கான காணிப்பதிவு நேற்றைய தினம் இடம்பெற்ற நிலையில் மக்கள் எவ்வித சுகாதார நடைமுறைகளையும் பின்பற்றாத நிலையில், நானாட்டான் கமநல கேந்திர நிலையத்தில் கூடி நின்ற நிலையில், முருங்கன் பொது சுகாதார பரிசோதகர்களின் துரித நடவடிக்கைகளினால் குறித்த பகுதியில் இருந்த அபாய நிலை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப் பட்டது.

சிறுபோக நெற் பயிர்ச் செய்கைக்கான காணிப் பதிவு சகல கமநல கேந்திர நிலையங்களிலும் பதிவு செய்யும் நிகழ்வு இடம் பெற்று வருகின்றது.

இதன் அடிப்படையில் நேற்று நானாட்டான் கமநல கேந்திர நிலையத்தில் காணிப் பதிவு இடம்பெற்று வரும் நிலையில் மக்கள் எவ்வித சுகாதார நடைமுறைகளையும் பின்பற்றாத நிலையில் நானாட்டான் கமநல கேந்திர நிலையத்தில் கூடி நின்றனர்.


முகக் கவசங்கள் அணியாமலும் போதிய சமூக இடைவெளியை பின்பற்றாமல் நூற்றுக்கும் அதிகமான மக்கள் அவ்விடத்தில் கூடி நின்றனர்.

இந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பாக முருகன் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரூபன் லெம்பேட் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உடனடியாக விரைந்து செயற்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி அவ்விடத்திற்கு பொதுச் சுகாதார பரிசோதகர்களை அனுப்பி துரித நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

நானாட்டான் கமநல கேந்திர நிலையத்தில் காணிப் பதிவுகளை மேற்கொள்ள வந்த மக்களை சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக முகக்கவசம் அணிய வைத்து சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்க துரித நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (5-4-285)



சிரேஷ்ட ஊடகவியலாளர் மாமனிதர் தர்மரெட்ணம் சிவராமின் 16 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது. (படம்:-சிவசாந்தன், சதீஸ்)



வடமாகாணத்தில் கொவிட் 2 ஆம் கட்ட தடுப்பூசி சுகாதாரப் பிரிவினருக்கு நேற்று வழங்கப்பட்டது. (படம்:- சதீஸ், சப்தசங்கரி, தேவானந்தன், வசந்த்ரூபன்)

## சுகாதார விதி மீறல்
# எச்சரிக்கை விடுத்த பொலிஸார்



(முறிகண்டி)

திணைக்களங்களின் முன்னால் சுகாதார விதிமுறைகளை மீறி ஒன்று கூடிய மக்களை பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்குமாறு எச்சரிக்கை விடுத்தனர். (5-4-100)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 24 பேர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஒழுங்குபடுத்தலில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கூட்டு நடவடிக்கையின் போது தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட 24 பேர் கைது செய்யப்பட்டதுடன் 18 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன் காரணமாக முல்லைத்தீவு கடற்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடித்தல் போன்ற சட்டவிரோத தொழில் முறைகள் கணிசமானளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் மாவட்டத்திற்கான உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதுவரை கைது செய்யப் பட்டவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ள நிலையில், நீதிமன்றினால் அவர்கள் இரண்டு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 15 செவ் 5 சூரி 4இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: M.B.B.S Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor மட்டும். உள்நாடு மட்டும்.<br>தொ.இ: B/11822 | பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 57 செவ் 7சூரி 12 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்:. A/L<br>எதிர்பார்ப்பு: அரச.தனியார் தொழில். உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/11831 |
| பிறப்பு:1981 இந்து நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 17 ¾செவ் 8 சூரி10 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L,வயரிங்.சாரதி<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்தபெண் வெளிநாடும் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/11823 | பிறப்பு:1986இந்து நட்சத்திரம்:புனர்பூசம்<br>கி.பா:செவ் 7 சூரி 12 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:M.B.B.S Doctor<br>எதிர்பார்ப்பு:Doctor<br>தொ.இ:G/11836 |
| பிறப்பு:1970 இந்து நட்சத்திரம்:ரேவதி<br>கி.பா: -செவ் 11 சூரி10 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: A/L ஆசிரியர் சுவிஸ் PR உண்டு.<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு, விவாகரத்து. பிள்ளைகள் உண்டு மணமகனுக்கு.<br>தொ.இ: B/11825 | பிறப்பு:1997 இந்து நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா:16 ½ செவ்12 சூரி9 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மணமகன்<br>தொ.இ:G/11838 |
| பிறப்பு:1978 இந்து நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: -செவ் 3 சூரி 11 இல்<br>தகைமை/தொழில்:Accounting Executive (Australia)<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி. Australia PR உள்ளவர்<br>தொ.இ: B/11826 | பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்:ரோகினி<br>கி.பா:26 செவ் 9 சூரி8 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/ தொழில்: BSc,PGDAd, SLEAS பிரதிக் கல்விப்பணிப்பாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச. தனியார் தொழில். உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/11839 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நிமிடம் மனப்பூர்வமாக மௌனமாக பிரார்த்தனை செய்தால்கூடப் போதும் இறைவன் எங்கிருந்தாலும் நம்மை நோக்கி ஓடிவந்து காப்பாற்றி விடுவார்.

*~ சின்மயானந்தா*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இந்திய மக்களுக்காக பிரார்த்தனை செய்வோம்!

இந்திய தேசத்தில் கொரோனாத் தொற்றினால் நாளாந்தம் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இதுதவிர, தினசரி மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் மரணமடைந்து போகின்றனர்.

அங்கு ஒலிக்கின்ற மரண ஓலங்களும் மனித உடல்களின் தகனங்களும் உலக மக்களின் இதயங்களைச் சுட்டெரிக்கின்றன.

ஆம், இந்தியாவின் பகைமை நாடுகள் கூட அங்கு ஏற்பட்டுள்ள கொரோனாப் பேரவலம் கண்டு நொந்து போயுள்ளன.

அந்தளவுக்கு அங்கு மனித உயிர்கள் கொத்துக் கொத்தாக மடிந்து போகின்ற பெருந்துயர் நடந்தாகின்றது.

என்ன செய்வது நாங்கள் ஈழத் தமிழர்கள். உரிமை அற்றவர்கள். வாழ்வுக்காக அன்றாடம் அகிம்சைப் போராட்டம் நடத்த வேண்டிய பரிதாபத்தில் இருப்பவர்கள்.

எந்த நேரத்திலும் எங்கள் சொந்தக் காணிகள் அபகரிக்கப்படலாம் என்ற ஏக்கத்தில் வாழ்கின்ற எங்களால் இந்தியாவுக்குச் செய்யக்கூடிய ஒரே உதவி.

இறைவா! இந்திய தேசத்து மக்களைக் காப்பாற்று என அன்புருகி வேண்டுதல் செய்வதுதான்.

ஆம், அன்பார்ந்த தமிழ் உறவுகளே!

அண்டை நாடான இந்திய தேசம் எங்களுக்கு தாய் பிள்ளை உறவு கொண்டது.

அங்கு கொரோனாத் தொற்றினால் மக்கள் மடிந்து கொண்டிருக்கின்றனர்.

அவர்களைக் காப்பாற்ற முடியாத அளவில் கொரோனாத் தொற்றுநோய் கோர தாண்டவம் ஆடுகிறது.

இந்நேரத்தில் இந்திய மக்களைக் காப்பாற்றுமாறு கடவுளைப் பிரார்த்திப்பது எங்களின் தார்மீகக் கடமை.

இதற்காக நாம் அனைவரும் மனம், மெய், மொழிகளால் இறைவனை இறைஞ்சுவோம்.

எல்லாம் வல்ல இறைவா! பாரத மாதாவின் பிள்ளைகளைக் காப்பாற்று என மன்றாடுவோம்.

எங்களின் மன்றாட்டம் நிச்சயம் அந்த மக்களைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கை உண்டு.

ஆகையால் வீடுகளிலும் ஆலயங்களிலும் தேவாலயங்களிலும் நடக்கின்ற பூசை வழிபாடுகளின்போது இந்திய மக்களுக்காக எங்களின் பிரார்த்தனை அமையட்டும்.

முடிந்தால் எங்கள் புலம்பெயர் உறவுகள் சார்ந்த அமைப்புகள் இந்திய தேசத்து மக்களுக்கு ஏதேனும் வழிகளில் உதவ முடியுமாயின், அந்த உதவிகளை விரைந்து செய்ய வேண்டும் என்பதும் நம் தாழ்மையான கோரிக்கை.

# திருமண மண்டபங்கள், திரையரங்குகள் நிபந்தனையுடன் திறக்க யாழில் அனுமதி

## ஆளுநர் தலைமையிலான கலந்துரையாடலில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 150 பேருடன் திருமண மண்டபங்களில் திருமண நிகழ்வுகளை நடாத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், திரையரங்குகளை 25 வீதமான பார்வையாளர்களுடன் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ். எம்.சாள்ஸ் தலைமையில் வடமாகாணத்தின் கொரோனா நிலவரம் தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் நேற்று நடை பெற்றிருந்தது. இந்த கலந்துரையாடலிலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி திருமண மண்டபங்களில் 150 பேருடன் திருமண நிகழ்வுகளை நடாத்தலாம். எனினும் பொலிஸார், சுகாதார பிரிவினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவார்கள். இதன்போது சுகாதார நடைமுறைகள் மீறப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் வெளி மாவட்டத்தவர்கள் நிகழ்வில் கலந்து கொள்ள முடியாது. மேலும் வணக்கஸ்தலங்களில் நிகழ்வுகளை உள்ளேயே நடத்த வேண்டும். அதற்கு மத தலைவர்கள், உபயகாரர்கள், பரிபாலன சபையினர் பொறுப்பாளிகள் ஆவர். மத தலங்களுக்கு வெளியேநிகழ்வுகளை நடாத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம-3,33)

### ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில்

# மைத்திரி ரணிலுக்கு எதிராக மேலும் 107 வழக்குகள்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக முன்கூட்டியே தகவல் கிடைத்தும் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை எனக் குற்றம் சாட்டி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட 6 பேருக்கு எதிராக மேலும் 107 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கொச்சிக்கடை சென்ட் அந்தோனியார் தேவாலய குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று இவ்வாறு வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

கடுவாப்பிட்டிய சென்ட் செபஸ்டியன் தேவாலய குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் கடந்த வாரம் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் 182 வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந் நிலையில், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால உட்பட 6 பேருக்கு எதிராக இதுவரையில் 289 வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டுள்ளன

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, அரச புலனாய்வு சேவை யின் பிரதானி நிலந்த ஜயவர்தன மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த வழக்குகளின் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான தகவல்கள் கிடைத்திருந்தும், தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதை மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-3)

# உலகின் முதல் நாடாக இலங்கையை மாற்றுவேன்

## ஜனாதிபதி கோட்டாபய திட்டவட்டம்

(கொழும்பு)

எடுக்கப்பட்ட தீர்மானங்களில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது - இரசாயன உரங்களின் பயன்பாட்டை முற்றிலுமாக நீக்கிய உலகின் முதல் நாடாக இலங்கையை மாற்றுவேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இரசாயன உரங்கள், பூச்சிகொல்லிகள் மற்றும் களை கொல்லிகள் பயன்பாடு மற்றும் இறக்குமதி மீதான தடை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, இரசாயன உரங்களின் பயன்பாட்டிலிருந்து நீங்கிய எந்த நாடும் உலகில் இல்லாதிருப்பது இலக்கை அடைவதற்கு ஒரு தடையல்லஎன்றார். (ம-3)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### இறப்பும் ஆன்மீக இயல்பும்

இறப்பைப் பற்றிய விழிப்புணர்வால் மட்டுமே உணர்ச்சிகளுக்கு வயப்படாத வைராக்கிய நிலையைத் தந்து, ஞானத்தில் உங்களை நன்கு பதிய வைக்க முடியும். எனவே எல்லா மதங்களிலும் எல்லா வழிபாட்டு இடங்களும் இடுகாடு/சுடுகாட்டோடு சம்பந்தப்பட்டுள்ளன.

இந்திய புராணப்படி, சிவபெருமானின் இருப்பிடம் கைலாய மலையும் மசானமும் (சுடுகாடும்) ஆகும். கைலாயம் என்பதற்கு "கொண்டாட்டம் மட்டுமே நடக்கும் இடம்" என்றும் மசானம் என்பதற்கு "வெறுமை மட்டுமே உள்ள இடம்" என்றும் பொருள்.

இவ்வாறாகத் தெய்வீகம், வெறுமை, கொண்[illegible] உங்களுக்[illegible] (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### துன்பங்களைப் போக்கும் வெற்றிலை; 12 இராசியினரும் செய்ய வேண்டியது

**விருச்சிகம்**

வெற்றிலையில் பேரிச்சம்பழம் வைத்து செவ்வாய் கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் துயரம் தீரும்.

**தனுசு**

வெற்றிலையில் கற்கண்டு வைத்து வியாழக் கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் கவலை தீரும்.

**மகரம்**

வெற்றிலையில் அச்சு வெல்லம் வைத்து சனிக்கிழமை காளி தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் கவலை தீரும்.

**கும்பம்**

வெற்றிலையில் நெய் வைத்து சனிக்கிழமை காளி தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் கவலை தீரும்.

**மீனம்**

வெற்றிலையில் சர்க்கரை வைத்து ஞாயிற்றுக் கிழமை இஷ்ட தெய்வத்தை வழிபட்டு சாப்பிட்டால் நோய் தீரும். (முற்றும்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# நீரிழிவைக் கட்டுப்படுத்த இலங்கை தமிழர்கள் பயன்படுத்தும் தாவரங்கள்

எழுதுபவர்: கலாநிதி.சரவணன் விவேகானந்தராஜா
[B.Sc.(Hons) Earth Sciences – UCL, UK; M.Sc. Analytical Chemistry - University of London, UK; Ph.D. Natural Products Research (Chemistry), Ethnopharmacology - UCL, UK]
கலாநிதி இ.கி.ஜெயசீலன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தாவரவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

நீரிழிவு நோயானது வேகமாக வளர்ந்து வரும் சுகாதாரப் பிரச்சினையாக மாறியுள்ளது. இது பல நாடுகளின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறாக அதிகரித்துவரும் பொருளாதாரச் சுமையாகும். ஒருவருக்கு நீரிழிவு நோயிருப்பதைக் கண்டறியப்படாவிடின், சிகிச்சைக்கான செலவும் உடலில் ஆபத்தான சிக்கல்களும் உயர்வதற்கான வாய்ப்புகள் ஏற்படும். தற்போது உலகத்தில் 463 பேருக்கு நீரழிவுண்டு. அதாவது பதினொரு வளர்ந்தோரில் (20 முதல் 79 வயது வரை) ஒருவருக்கு நீரிழிவுண்டு. துரதிர்ஷ்டவசமாக இவர்களில் அரைவாசிப் பேருக்கு (இருவரில் ஒருவருக்கு) நீரிழிவு இருக்கிறதென்பது கண்டறியப்படவில்லை. உலகெங்கிலுமுள்ள நீரிழிவு நோயாளிகளில் கிட்டத்தட்ட 90 வீதமானோருக்கு இரண்டாம் வகை நீரிழிவு நோயுள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் இரண்டாம் வகை நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்து வருகிறது. நீரிழிவு நோயாளிகளில் பெரும்பாலோர் (310.3 மில்லியன் பேர்) நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர். மேலும், நீரிழிவு நோயாளிகளில் பெரும்பாலோர் 20 முதல் 64 வயது வரம்பில் உள்ளனர். நீரிழிவு உண்டென்று கண்டறியப்படாத நோயாளிகளின் அதிக விகிதம் ஆபிரிக்காவில் காணப்படுகிறது.

ஒவ்வொரு ஆறு விநாடிகளிலும் ஒருவர் நீரிழிவு நோயால் இறக்கிறார். முக்கியமாக, பெரும்பாலான நீரிழிவு நோயாளிகள் குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் வாழ்கின்றனர். ஆகவே, அவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட நவீன மருத்துவ சேவையே கிடைக்கிறது.

ஒரு வருடத்தில் உலகளவில் 760 பில்லியன் அமெரிக்க டொலர் (சுகாதார செலவினங்களில் 10%) நீரிழிவு நோய்க்கு சிகிச்சையளிக்க செலவிடப்படுகிறது. உலகிலே ஐக்கிய அமெரிக்காவில்தான் இதற்காக அதிக செலவு செய்யப்படுகிறது. ஐரோப்பாவிலே அதிகமாக முதலாம் வகை நீரிழிவால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் உள்ளனர்.

தற்போது இலங்கையில் 1.2 மில்லியன் நீரிழிவு நோயாளிகள் (20 முதல் 79 வயது வரை) உள்ளனர். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பன்னிரண்டு பேரில் ஒருவருக்கு நீரிழிவு நோய் உள்ளது. ஒரு நீரிழிவு நோயாளிக்கான சிகிச்சைச் செலவு சராசரியாக 429.2 அமெரிக்க டொலர் ஆகும். ஒட்டுமொத்தமாக, நீரிழிவு நோயைத் தடுப்பதற்கும் அதன் விளைவுகளைத் தணிப்பதற்கும் தேசிய மற்றும் பிராந்திய உத்திகளை உருவாக்க வேண்டிய அவசியமுள்ளது.

### தாவரங்கள், பாரம்பரிய மருந்துகள் மற்றும் நீரிழிவு நோய் (உலகளவில்)

பல நூற்றாண்டுகளாக நீரிழிவு உள்ளிட்ட ஏராளமான கோளாறுகளுக்கு சிகிச்சையளிக்க பாரம்பரிய மருந்துகளில் தாவரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், தாவரங்கள் எளிதில் கிடைக்கக் கூடியதுடன், அவை மலிவானவையும் கூட. பாரம்பரிய மருத்துவ மருந்துகள் சாத்தியமான நீரிழிவுக்கெதிரான புதிய சேர்வைகளைக் கொண்ட மூலமாக இருக்கலாம். மெட்ஃபோர்மின் **(Metformin)** என்பது நவீன மருத்துவத்தில் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தத் தற்போது பயன்படுத்தப்படும் ஒரு முதனிலை மருந்தாகும். இது கலேகாஅஃபிசினாலிஸ் **(Galegaofficinalis L.)** எனும் தாவரத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒரு சேர்வையிலிருந்து **(Galegine)** உருவாக்கப்பட்டது.




### தாவரங்கள், பாரம்பரிய மருந்துகள் மற்றும் நீரிழிவுநோய் (இலங்கை)

இலங்கையில் கிராமப்புற மக்களில் சுமார் **60%** முதல் **70%** பேர் பாரம்பரிய மருந்துகளையே சிகிச்சைக்காக முதன்மையான முக்கியமான மூலமாகப் பயன்படுத்துகின்றனர். இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள நான்கு பாரம்பரிய மருத்துவ முறைகளில் சித்த (தமிழ்) மருத்துவம் ஒன்றாகும். சித்த வைத்தியமானது தமிழர்கள் பெரும்பாலும் வசிக்கும் இலங்கையின் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. நீரிழிவு நோயாளிகள் பொதுவாக இலங்கையில் மூலிகை மருந்துகளைப் பயன்படுத்துகின்றனர். இந்திய பாரம்பரிய மருத்துவத்திலிருந்து நீரிழிவு நோய்க்கு எதிரான புதிய மருந்துகளுக்கான தேடல் தொடர்கிறது. சித்த மருத்துவம் பெரிதாக ஆய்வு செய்யப்படவில்லை என்பதால், இது புதிய நீரிழிவு நோய்க்கு எதிரான மருந்துகளைக் கண்டு பிடிப்பதற்கு தனித்துவமான வாய்ப்புகளைக் கொண்டதாகவிருக்கிறது.

### நவீன மருத்துவத்தில் நீரிழிவு

உடலில் உயர்ந்த இரத்த குளுக்கோஸ் அளவானது நீரிழிவு நோயென்று அழைக்கப்படுகிறது. இது நரம்பு மண்டலம், இரத்த நாளங்கள், கண்கள், ஈறுகள் மற்றும் பற்கள், இதயம், சிறுநீரகங்கள், கால்கள், மற்றும் தோலுக்குச் சேதத்தை ஏற்படுத்துகிறது. நீரிழிவு நோயில் மூன்று வகைகள் உள்ளன. அவை யாவன:

1. முதலாம் வகை நீரிழிவு அல்லது இன்சுலின் சார்ந்த நீரிழிவு.
2. இரண்டாம் வகை நீரிழிவு அல்லது இன்சுலின் சாராத நீரிழிவு.
3. கர்ப்பகால நீரிழிவு.

நீரிழிவு நோயின் அனைத்து வகைகளும் உணவுக் கட்டுப்பாட்டால் சிகிச்சையளிக்கப்படுகின்றன. இருப்பினும், முதலாம் வகை நீரிழிவுக்கு இன்சுலின் அல்லது அறுவைச் சிகிச்சை மூலம் சிகிச்சையளிக்கப்படுகிறது. இயற்கைச் சேர்வைகள் மற்றும் மூலிகை மருந்துகள் என்பன இரண்டாம் வகை நீரிழிவுச் சிகிச்சையில் பயனுள்ளதாக இருக்கின்றன.

### சித்த / தமிழ் மருத்துவம்

சித்த மருத்துவம் சைவசித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டது. சித்த மருத்துவம் தென்னிந்தியாவில் பண்டைய தமிழ்ப் பகுதிகளில் கி.மு. 10,000 முதல் கி.மு. 4,000 வரையான காலப்பகுதியில் தோன்றியதாக நம்பப்படுகிறது. இது தற்போது இந்தியா, இலங்கை மற்றும் உலகெங்கிலும் தமிழ் பேசும் பகுதிகளில் பெரும்பாலும் பயன்பாட்டிலுள்ளது. சித்த மருத்துவத்திற்கு பங்களித்த பதினெட்டு சித்தர்கள் உள்ளனர்: அகத்தியர், திருமூலர், போகர், கொங்கணர், தேரையர், கோரக்கர், கருவூரார், இடைக்காடர், சட்டை முனி, சுந்தரானந்தர், இராமதேவர், பாம்பாட்டி, மச்சமுனி, குதம்பை, அழுகண்ணர், அகப்பே, நந்திதேவர் மற்றும் காகபுசுந்தர்.

சித்த வைத்தியத்தில் சில பொதுவான தத்துவங்கலுள்ளன.

அவையாவன: "உணவே மருந்து, மருந்தே உணவு" மற்றும் "மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டா". கிழக்கு மற்றும் வடக்கிலங்கையில் வாழ்ந்த சில குறிப்பிடத்தக்க இலங்கைச் சித்தர்களுமுள்ளனர். குறிப்பாக அரை நூற்றாண்டுக்கு முன்பு வாழ்ந்த யோகர் சுவாமியும் அவரது குரு செல்லப்பா சுவாமியும் உலகம் முழுவதும் நன்கு அறியப்பட்டவர்கள்.

சித்த மருத்துவம் பற்றி மேற்கத்தேய உலகிற்கு மிகவும் குறைவாகவே தெரியும். ஏனென்றால் சித்த நூல்களில் பெரும்பாலானவை இன்னும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படவில்லை. இருப்பினும், இது நவீன மருத்துவத்தால் தமிழ் சமூகங்களுக்குள் பிரதானமாகப் பயன்படுத்தும் கிழக்கு இந்திய மாற்று மருத்துவ முறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

சித்த மருத்துவத்தின் நோக்கங்கள் உடலை முழுமையாக்குவதும் நீண்ட ஆயுளை ஊக்குவிப்பதுமாகும். மனிதர்களின் மன, உடல், தார்மீக, சமூக மற்றும் ஆன்மிகக் கூறுகளின் சரியான நிலையான ஆரோக்கியத்தை வலியுறுத்தும் முதல் மருத்துவ முறை இதுவாகும். சித்த மருத்துவதத்துவம் மருத்துவ, ஆன்மிகம் மற்றும் அறிவுசார் அம்சங்களில் உருவாக்கப்பட்டுள்ளது. இது உள்ளாத்மாவிற்கும் வெளிப்புற உடலுக்கும் சமமான முக்கியத்துவத்தையளிக்கிறது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிபாட்டுத்...

வரை ஒன்றுகூடத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்துவரும் கொரோனாத் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக இத் தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள விசேட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த வழிபாட்டுத்தலங்களில் அதிகபட்சமாக 25 பேர் மாத்திரமே இருக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## ரயில் சேவைகள்...

நாளை முதலாம் திகதி முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளதாக இலங்கை தொடருந்து திணைக்களம் அறிவித்துள்ளது.

நாளை 1ஆம் திகதி தொடக்கம் 3ஆம் திகதி வரை தொடருந்து சேவைகள் கட்டம் கட்டமாக இடைநிறுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை, கண்டி, காங்கேசன்துறை, பொலநறுவை, பெலியத்த ஆகிய பகுதிகளுக்கு முன்னெடுக்கப்படும் தொடருந்து சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## மாமன் தாக்கி...

வருவதாவது,

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மயில்வாகனம் பகுதியில் நேற்றைய தினம் மாலை 4.30 மணியளவில் மாமனுக்கும் மருமகனுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

இதில் மாமனார் தாக்கியதில் படுகாயமடைந்த மருமகன் தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த பெருமாள் ரவிச்சந்திரன் (வயது-36) என்பவரே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,316)

## யாழில் பொலிஸ்...

சோதனையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## மாணவனுக்கு...

நேற்றைய பரிசோதனையில் யாழ். போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை மாணவன் ஒருவருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (ம-3)

## P2P...

வழக்கினை விசாரிக்க, கல்முனை நீதவான் நீதிமன்றுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் கல்முனை நீதவான் நீதிமன்றில், ஏழு பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஒன்றில், இன்றைய தினம் முன்னிலையாகுமாறு அவர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கல்முனை நீதவான் நீதிமன்ற நடவடிக்கைக்கு எதிராக, மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குறித்த இடைக்காலத் தடை பிறப்பிக்கப்பட்டதாக, பாராளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (ம-3)

## கொரோனா பிடி...

யுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதுகுறித்து இந்திய பிரதமருக்கு ஜனாதிபதி அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் ஜனாதிபதி இந்தியாவின் கொரோனா வைரஸ் நிலைவரம் குறித்த தனது கரிசனையை வெளியிட்டுள்ளார். இலங்கைக்கான இந்திய தூதரகம் இதனைத் தெரிவித்துள்ளது.

மனித குலத்தின் ஒருங்கிணைந்த முயற்சிகள் இத்தகைய தொற்றுநோய்களை தோற்கடிப்பதில் வெற்றி கண்டுள்ளன எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அர்ப்பணிப்புமிக்க நிபுணர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களின் உதவியுடன் இந்தியா இந்த நெருக்கடிக்கு தீர்வை காணும் எனவும் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி தனது கடிதத்தில் இந்தியா வழங்கிய கொரோனா வைரஸ் தடுப்பூசிக்காக இலங்கை மக்களின் சார்பில் நன்றியை தெரிவித்துள்ளார். (ம-3)

## 6 பேர் பலி...

சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று உறுதிப்படுத்தினார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 667 ஆக அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார். (ம-3)

## கஞ்சா...

யைச் சேர்ந்த மூவர் கஞ்சா போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை பிராந்திய சிறப்பு குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் இந்தக் கைது நடவடிக்கையை நேற்று வியாழக் கிழமை முன்னெடுத்தனர்.

பருத்தித்துறை வியாபாரிமூலையைச் சேர்ந்த 20, 31 மற்றும் 38 வயதுடைய சந்தேகநபர்களே கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்களிடமிருந்து 6 கிலோ கிராம், 2 கிலோ கிராம் மற்றும் 500 கிராம் என 8 கிலோ 500 கிராம் கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் மூவரும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் நேற்றிரவு முற்படுத்தப்பட்டனர். (ம-3,33)

## வார இறுதி நாட்...

மேலும் இலங்கையில் கொரோனா வைரஸின் மூன்றாவது அலையின் தாக்கம் மிகவும் மோசமான கட்டத்தை அடைந்து வருவதாக சுகாதார அதிகாரிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

நாட்டில் கடந்த சில தினங்களாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோவிட் தொற்றாளர்கள் நாளாந்தம் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

இலங்கையில் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொற்றாளர் அடையாளம் காணப்பட்டால் அது பெரும் ஆபத்தாக மாறும் என்பதை சுகா தார அதிகாரிகள் ஏற்கெனவே எச்சரித்துள்ளனர்.

இந்நிலையில் நாட்டின் பல பகுதிகளில் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை குறித்து பெரும்அச்சம்வெளியிடப்பட்டுள்ளது.

தற்போதைய ஆபத்தான நிலையை உணர்ந்து நாட்டு மக்கள் உரிய சுகாதார விதிமுறைகளை முறைப்படி கடைப்பிடிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.




## கொடிகாமம்...

பட்டுள்ளனர்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் நேற்று எழுமாறான பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

அதில் கொடிகாமம் சந்தை, அதை அண்டிய கடைகளில் குறிப்பிட்ட ஒரு பகுதியினருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 4 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். அதில் இருவர் கொடிகாமம் சந்தை வியாபாரிகள். இருவர் அருகிலுள்ள வர்த்தக நிலையத்தில் பணியாற்றுபவர்கள்.

இன்று சந்தை மற்றும் நகரிலுள்ள வர்த்தக நிலையங்களில் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. (ம-3,18,33)


செவன
திகதி 29/04/2021
சீட்டிழுப்பு இலக்கம் 333
ஆங்கில எழுத்து D
வெல்லப்பட்ட இலக்கங்கள் 02 04 26 56

மெகா பவர்
திகதி 29/04/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0824
T 19 25 50 57 78

சம்பத லக்ன வரம
திகதி 29/04/2021
சீட்டிழுப்பு இலக்கம் 03
E 2 5 2 7 1 2
கன்னி 17 18 80

மஹஜன சம்பத
திகதி 2021/04/29
சீட்டிழுப்பு இலக்கம் 4466
0 5 4 6 4 7 1

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 29.04.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2761
Y 16 25 27 50

தன நிதானய
திகதி - 2021.04.29
சீட்டிழுப்பு இலக்கம் - 503
G 06 14 54 76

அத கோடிபதி
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1262
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 29.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 132,031,340
வெற்றி இலக்கங்கள் 03 29 56 64 V

சனிதா
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3592
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 29.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 38,107,640
வெற்றி இலக்கங்கள் 09 41 51 71 C

ராசி
சுப்பர் ஜக்பொட் 47,38,269/=
வெற்றி இலக்கங்கள் 25 39 43 53
சிம்மம்
திகதி: 29.04.2021
வெற்றி வாரம்: 3143
வர்ணம்: மண்ணிறம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,114,300

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1436
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 29/04/2021
தினம் வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் 54,010,979/=
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் G 06 13 28 70

சம்பத்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 429
திகதி 29.04.2021
நீலம்
E 11 50 51 5
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 12,613,304
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தையன்கட்டில் தீ விபத்து; மூன்று கடைகள் சேதம்

## முதியவர் படுகாயம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் முத்தையன்கட்டு எல்வி சந்தி பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற தீவிபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறிய வர்த்தக நிலையம் ஒன்றில் எரிபொருளும் விற்பனை செய்யப்படும் நிலையில் இத் தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

72 வயதுடைய பெரியண்ணா என அழைக்கப்படும் செ.அரிராசசிங்கம் என்ற முதியவரே இத் தீவிபத்தில் படுகாயமடைந்துள்ளார்.

முதியவரின் கடையுடன் அருகில் இருந்த இரு கடைகளும் தீயினால் சேதமடைந்துள்ளன. இச்சம்பவம் தொடர்பாக ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-03, 281, 350)


கண்ணீர் அஞ்சலி



வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் திரு. இ. இளங்கோவன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர்

மகேஸ்வரி இலட்சுமணன்

அவர்கள் கொழும்பில் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து மிகவும் கவலை அடைவதுடன் அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

VANNI HOPE - AUSTRALIA

USDF - SRI LANKA

(6754)


### சுகாதார தரப்பினரது அறிவுறுத்தல்களை

# மக்கள் முழுமையாக பின்பற்ற வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம

(கொழும்பு)

சடுதியாக அதிகரித்துள்ள கோவிட்-19 வைரஸ் தாக்கத்தை அரசாங்கம் சிறந்த முறையில் கையாளும். சுகாதார தரப்பினரது அறிவுறுத்தல்களை நாட்டு மக்கள் அனைவரும் முழுமையாக பின்பற்ற வேண்டும். நெருக்கடியான சூழ்நிலையில் அரசியல் இலாபம் தேடுவதை எதிர்த் தரப்பினர் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், புத்தாண்டு காலத்திற்கு பின்னர் கோவிட்-19 வைரஸ் தொற்று சடுதியாக அதிகரித்துள்ளது. இவ்விடயத்தில் அரசாங்கத்தை விமர்சிப்பது பயனற்றது. கோவிட்-19 வைரஸ் தாக்கத்தின் முதல் மற்றும் இரண்டாம் சுற்றினை அரசாங்கம் சிறந்த முறையில் கையாண்டது. இதன் காரணமாகவே கோவிட்-19 வைரஸ் தாக்கத்தை வெற்றிகரமாக கையாண்டுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை 10 ஆம் இடத்தை பிடித்தது.

பலம் கொண்ட நாடுகளினால் கூட கோவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலை காணப்படுகிறது. தற்போது நாட்டில் வைரஸ் தொற்று எதிர்பார்க்காத வகையில் பரவலடைந்துள்ளது.

தற்போதைய நெருக்கடி நிலைமையை அரசாங்கம்வெற்றிகரமாக கையாளும். நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு அனைத்து தரப்பினரும் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். குறுகிய அரசியல் தேவைக்காக தற்போதைய சூழ்நிலையை பயன்படுத்திக் கொள்வதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களை நாட்டு மக்கள் முழுமையாக பின்பற்ற வேண்டும்.

பொது போக்குவரத்து சேவைகளில் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் முழுமையாக பின்பற்றப்படுகின்றதா என்பது தொடர்பில் கண்காணிக்க பொலிஸார் சிவில் பிரஜைகளை போல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களை பின்பற்றாத தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ம-03)

### கொரோனாத் தொற்று தீவிரம்

# அதிதீவிர சிகிச்சைக்காக வடக்கில் 3 கட்டில்களே

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலேயே கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கான அதிதீவிர சிகிச்சைப் பிரிவு காணப்படுகின்றது எனவும், அதில் 3 கட்டில்கள் மாத்திரமே உள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் உறுதிப்படுத்தினார்.

வடக்கு மாகாணத்திலும் கொரோனாத் தொற்றாளர்கள் நாளுக்கு நாள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். அந்தவகையில், கொரோனா நோயாளிகளுக்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்குவதற்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மாத்திரமே உள்ளது. அந்த வைத்தியசாலையிலும் 3 கட்டில்கள் மாத்திரம் உள்ளன. தற்போது ஒரு நோயாளி சிகிச்சை பெற்று வருகின்றார். (ம-03)


# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் இராமகிருஷ்ணன்

(ஓய்வுநிலை ஆசிரியர்)

யாழ். வடமராட்சி, தும்பளை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராமகிருஷ்ணன் (ஓய்வுநிலை ஆசிரியர்) நேற்று (29.04.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகேந்திரம் - மனோன்மணி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற இந்திரகுமாரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற ஸ்ரீநிவாசன் (ஆசிரியர்), ரகுராம் (நீதிமன்றம் - பருத்தித்துறை), வெங்கடரமணா (MG Consultant) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கலையரசி, கிருசாந்தினி, கிருஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், அட்சயன், அம்புஜன், அனுஷ்கா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று மாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-2076)

தும்பளை மேற்கு. பருத்தித்துறை.

ரகு : 077 746 8783

ரமணா : 076 301 6911

தகவல்:- குடும்பத்தினர்

காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(C-2075)

077 436 6704, 077 179 1963

உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்

விரைவுப் பொதிகள் சேவை

விசா சேவைகள்

V2 TRAVELS

(C-2005)

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 15'000/-

பயிற்சியின்போது - 10'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0777-068-777

v2vacancies@gmail.com

வீடு விற்பனைக்கு உண்டு

31/3, டேவிற் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

(6749)

076 106 1407

077 526 1407

021 222 1270

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-1000/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-2004)

0768226240 DHL

அன்னா EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/=

070 3305500

077 888 9388

(C-2006)

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

சங்கானை, ஆவரங்கால், நெல்லியடி, சங்கத்தானை

பளை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லை

மல்லாவி, மன்னார், வவுனியா, கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.